# தூய ஆவியில் பயணம்

2010 தை

........................... புத்தாண்டு வாழ்த்துக்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியில் பயணம்

தை மாதம் 2011

"உமது விருப்பத்தைத் தவிர எனக்கு

வேறு எதுவும் இல்லை"

ISSN 1391 - 5975

வெளியிடுபவர்
சிறி ஒஸ்கா அபயரத்ன அடிகளார்
கிது தன புபுதுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2011 தை மாத தூய ஆவியின் பயணம்

இறைவன் உங்களையும் என்னையும் அழைத்திருப்பது பரிசுத்தமானவனாகவும் பிரிசுத்தமானவளாகுவதற்கு ஆகும். இது எமது தனிப்பட்ட தெரியாத காரணமாகும். அதை நாம் அறிந்துக் கொள்வதற்கு முடியாததாகும்.

இந்த அழைத்தல், வார்த்தைகளால் சொல்லும் போது, *ஆனாலும்* என்ற வார்த்தைக்கு இடம் கிடைக்கிறது. துறவற, பொதுநிலையினர் பெண் அல்லது ஆண் என்ற வார்த்தை எம்மை அழைத்திருக்கும் அழைத்தலை தெளிவுப்படுத்துகிறது. அழைத்தல் எதுவாயிருந்தாலும் படைப்பாளர் என்னை அழைத்திருப்பது பரிசுத்தமானவன் - பரிசுத்தமானவள் ஆகுவதற்காகும்.

அதற்கு மனித பதில் பலவிதமாகும். பௌத்த, இந்து, இஸ்லாம் அல்லது கிறிஸ்தவபோன்ற பல மதங்கள் எதிர்பார்ப்பது அனேகமானோர் அல்லது அனைவரும் மதத்தை மேவிச் செல்லுதலைக் காண்பதற்காகும்.

அருட் திரு. ஒஸ்கா அபேரட்ண அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 தை 01 சனி இறை அன்னையின் திருநாள்

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்தி வெளிப்பாடு |
| --- | --- | --- | --- |
| எண்6 : 22 - 27 | தி.பா 67 :1-2, 4-5,7 | கலாத்தியர் 4 : 4-7 | புனித லூக்கா2 : 15 - 21 |

## நாளின் அறிமுகம்

மனித வாழ்வு மகிழ்ச்சியும் அமைதியுமானதாக இருக்க வேண்டும் என்பது எம் ஒவ்வொருவரினதும் ஆசையும் எதிர்பார்ப்புமாகும். இன்று புதுவருடம் ஆரம்பமாகின்றது. பழையன மறந்து விடுவோம், புது வாழ்வுக்கு அடித்தளம் இடுவோம். *'திருச்சபைத் தாயார் பேறுபெற்ற தாயார் இறைவனின் தாய்'*என்னும் மங்களமான நற்செய்தியை எமக்கு நினைவூட்டுகின்றார். நாமும் தாயாரைப்போன்று இறை திட்டத்திற்கு முதலிடமளித்து எம் வாழ்வை மாற்றிக் கொள்ள இறை ஆசி வேண்டுவோம். மலர்ந்த புத்தாண்டு அன்பும் மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்ததாகிட, இறை அன்பில் வெற்றியைப் பிரார்த்தித்து அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வோம்.

## நற்செய்தியிலிருந்து

***வானதூதர் அவர்களை விட்டு விண்ணகம் சென்ற பின்பு இடையர்கள் ஒருவரை யொருவர் நோக்கி.... அதைக் கேட்ட யாவரும் இடையர்கள் தங்களுக்குச் சொன்னவற்றை குறித்து வியப்படைந்தனர். ஆனால் மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)***

## ஒளியில் விழிப்புறுதல்

இன்றைய முதலாம் வெளிப்பாடு இறைவன் மோசே வழியாக ஒருவர் மற்றவருக்கு எவ்வாறு ஆசி கூற வேண்டும் என்பதை விளக்கிக் காட்டுகின்றார். இறைவன் அன்பின் ஊற்று. சகலரையும் அன்பு செய்பவர். அதனையே அவர் எம்மிலும் எதிர்பார்க்கின்றார். மனிதனை பாவத்திலிருந்து மீட்பதற்காக தம் ஒரே மகனை இவ்வுலகத்திற்கு அனுப்புவது இறை சித்தமாக இருந்தது. அதற்கான இறை தந்தையின் தெரிவே கன்னிப் பெண் மரியா. இயேசுவின் பிறப்பு மரியாவுக்கு அறி-விக்கப்படும் பொழுது அவர் கலக்க முற்றாலும், பெற்ற அழைப்பிற்குப் பதிலாக ஆமென் என்கின்றார்.ஆகவே அவள் கடவுளைத் தாங்கும் பேழையாகும் வரம் பெற்றார். அருள் நிறைந்தவள் என்னும் பாக்கியம் பெற்றார். விண்ணகத்தில் முடி சூட்டப்பட்ட அரசியாகின்றார். இடையரின் வார்த்தைகள் மரியாவை வியப்படையச் செய்தாலும் *அவளோ உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்* என்று இறை விருப்பத்திற்கு இடமளிக்கின்றார்.

## எம் பேரில்

இறை நம்பிக்கையில் வாழும் பொழுது, வாழ்வில் முகம் கொடுக்க நேரிடும் எந்தச் சவாலுக்கும் வெற்றிகரமாக முகம் கொடுக்க முடியும். என் செப வாழ்வை ஆண்டவர் விரும்புகின்றார். அவரை மகிமைப்படுத்த தாழ்ச்சி என்னும் நற்குணம் வேண்டும். இறை அன்னையிடம் இக்கொடையைப் பெற்றுக்கொண்டு மனமாற்றத்துடன் பெற்ற அழைப்பிற்கு விழிப்புறுவோம். அன்பு, பணிவு, இரக்கம் போன்ற நற்பண்புகளை தூய ஆவியிடம் வேண்டி, *உம் விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை* என்று தாகத்துடன் கூறி இறை அன்பில் நிறைவு பெறுவோம்!

## செபம்

அன்பின் தந்தாய்! உமது அன்பின் பரிசாக நாம் பெற்றுள்ள புத்தாண்டிற்காக நன்றி கூறுகின்றோம். இவ்வருடம் பூராக இறை அரசிற்காக தாகத்தோடு செயல்படவும் முகம் கொடுக்க நேரிடும் சகல சவால்களிலும் உம் அன்பினில் நிலைத்து வாழ வரம் தாரும் ஆமென்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை

| 2011 | தை 02 ஞாயிறு | திருக்காட்சித் திருவிழா | |
|---|---|---|---|
| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்தி வெளிப்பாடு |
| எசாயா 60 : 1 - 6 | 72 : 1-2, 7-8,10-13 | எபேசியர் 3: 2-3, 5-6 | புனித மத்தேயு 2: 1-12 |

### அறிமுகம்

இஸ்ரயேல் மக்களது முதலாவது அரசனாக சவுல் அபிஷேகம் செய்யப்படும் வரை அவர்களது ஒரே அரசனாக இருந்தவர் மகா உன்னதரான இறைவனேயாவார். நாடு என்ற கருத்தானது எவராவது ஒருவரது ஆளுகின்ற பிரதேசத்திற்கு வரையறுக்கப்பட்டதாகும். இயற்கையாக உண்டாகின்ற, இல்லாமலாகின்றதை ஆளுவதற்காக வேண்டி நியமிக்கப்பட்டுள்ள அரசரொருவர் உலகிலே இல்லை. அரசாங்கம், நாடு என்பது ஒரே கருத்தைக் கொண்டதாகாது. இயேசு கிறிஸ்து எனும் பாலகன் அரசனும், இறைவாக்கினரும், குருவும் ஆவார். அதனை அறிந்து கொண்ட ஞானிகள் பரிசுகளுடன் வந்து அகிலத்தினதும் அரசனை வாழ்த்திய பெரும் விழாவின் நாள் இன்றாகும்.

### முதலாவது வேண்டுதல்

இறை தகப்பனே, விண்மீன் வழியாக உம் திருமகனை முழு உலகிற்கும் வெளிப்பாடாக்கினீர். உண்மையான தர்மத்தை விசுவாசத்தோடு அவரை ஏற்றுக் கொண்ட எமக்கு அவரது அரசின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான வழியை ஏற்படுத்தித் தந்தருளும்.

### முதலாவது வெளிப்பாட்டில்

***எழு! ஒளி வீசு, உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது. இதோ! இருள் பூவுலகை மூடும். காரிருள் மக்களினங்களைக் கவ்வும். ஆண்டவரோ உன் மீது எழுந்தருள்வார். அவரது மாட்சி உன் மீது தோன்றும்... அப்போது நீ அதைக் கண்டு மகிழ்வாய்.....***

### ஒளியில் விழிப்புறுதல்

இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட அரசர்களது தகாத செயல்கள், மக்கள் இறைவனைக் கைவிட்டுச் சென்றமையால் பபிலோனியாவில் ஐம்பது வருடங்களாக அடிமைகளாக வாழ்ந்து விடுதலை பெற்று வந்த மக்களுக்கு மூன்றாவது எசாயாவினால் வெளிப்பாடாக்கப்படுகின்ற நற்செய்தியாகும் இது. சுற்றுப்புறமெங்கும் உள்ள நாடுகளை விந்தைக்குட்படுத்தும் யுகமொன்று உதயமாகும். அரசர்கள் காணிக்கைகளைக் கொடுப்பதற்காக வருகின்ற புதிய அரசரொருவர் பற்றிய நற்செய்தியிது. அது வருங்காலத்தில் ஏற்படுகின்ற *மீட்பரின் அரசு* பற்றிய வெளிப்பாடான போதிலும் அனாதரவான மக்கள் இறைவன் பால் மனந்திரும்ப வேண்டும் என்பது அதன் வழியாக வெளிப்பாடாகியது.

மக்களுக்காக வேண்டி பணிபுரிவதற்கு மக்களது உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆளுனரொருவரைத் தேர்ந்து கொள்வதானது நல்லதொரு சமூகத்தின் தேவையாகிறது. ஆயினும் மக்களது விருப்பத்தை நேர்மையானதாகவோ, நேர்மையீனமாகவோ பெற்றுக்கொள்ளுகின்ற ஆட்சியாளர்களினால் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அல்லது அழித்து விடுவதற்கோ முடியுமான போதிலும் உலகை ஆளுகின்ற இறைவனை விட அன்பார்ந்த விசுவாசமான ஆளுனர்கள் உலகில் தோன்றியதேயில்லை. அந்த அரசன் யார் என்பதை உலகிற்குப் பறைசாற்றுவதற்கு இந்த யுகத்தைவிட வேறு யுகமே இல்லைப்போலும். சூரியன் மறையாத பேரரசு என்ற பெயரைக் கொண்ட பெரிய பிரித்தானியாவில் கூட இன்று பெயரளவிலான அரசியொருவரே இருக்கின்றார். அனைத்துத் தலைவர்களையும் விட அதி உன்னதமான அரசர் உலகிற்கு வெளிப்பாடாகின்ற பெருவிழா நாளில் எமக்குள்ள சவாலை இனங்கண்டு கொள்வதன் தேவை இருக்கின்றபடியால், ஆவியான-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரின் ஒளியை வேண்டி இறைஞ்சுவோம்.

## இரண்டாவது வேண்டுதல்

இறைவனே, தீர்ப்பிடுவதற்கான ஞானத்தை அரசருக்குக் கொடுத்தருளும். அதே இளங்குமாரனுக்கு நீதி நேர்மையோடு செயற்படுவதற்கான ஆற்றலையும் அளித்தருளும். அப்போது அவர் மக்களை நேர்மையோடு ஆளுவார். (இன்றைய நாளுக்குரிய திருப்பாடல் பகுதியை உரிமையாக்கிக் கொண்டு நீண்ட நேர செபத்திற்கு உள்ளாகலாம்)

## நற்செய்தியிலிருந்து

***ஏரோதும் அரசன் காலத்தில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். அப்போது கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து, யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம். என்றார்கள். இதைக் கேட்டதும் ஏரோது அரசன் கலங்கினான்......***

## ஒளியில் விழிப்புறுதல்

தமது ஆட்சியுரிமை இல்லாமல் போகுமென்ற அச்சம் மேற்கொண்டவராக ஏரோது தமது நிலையை பிறர் அறியாதவாறு தந்திரமாக ஞானிகளைத் தம்பக்கம் ஈர்த்துக்கொள்வதற்கு முனைகின்றார். தம்மிலும் வல்லமையில் கூடிய ஒருவர் தலைதூக்குகின்றாரா என்பதன் பேரில் விழிப்புடன் இருப்பது ஆளுமைப்படைத்தோரது இயல்பாகும். தம்மைச் சந்திக்காது ஞானிகள் திரும்பிச் சென்றதன் பின்னர் இரண்டு வயதுக் குழந்தைகளைக் கொலை செய்வதற்கான காரணம் அதுவாகும். மாட்டுத் தொழுவத்தில் பிறந்த இராசாதி இராசனை மேப்பட்ட வேறு ஒருவரும் பிறக்கவுமில்லை, பிறக்கப்போவதுமில்லை என்பதை அச்சமின்றி வெளிப்பாடாக்குகின்ற இறை மக்கள் நாமாவோம்.

## அனுபவமொன்று

குறிப்பிட்டதோர் காலப் பகுதியில் அரசாட்சிக்கு வந்த அரசாங்கம் நாடெங்கிலும் மதுபான விற்பனை நிலையங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவாறு அமைதியான போராட்டத்தில் ஈடுபட்ட எமது புபுது பெற்றோர் குண்டர்களது தாக்குதலுக்கு உள்ளாகி வைத்திய சாலைகளில் அனுமதிக்-கப்பட்டனர். இதைப் பற்றிய முறைப்பாட்டினை ஏற்றுக்கொள்-வதற்கு காவல் துறையினர் தயாராக இருக்கவில்லை. அப்போது ஆட்சியில் இருந்த பிரதி அமைச்சரிடம் நீதி கோர நான் சென்றபோது அவரது பதில் இதுவாக இருந்தது "...வருடங்கள் அவர்கள் ஆட்சி புரிந்த போது எமது கட்சி மக்கள் துன்புற்றனர். இப்போது எமது மக்கள் உழைப்பதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். நீங்கள் இதுபற்றி கரைச்சல் படவேண்டாம்." இதுதான் நாம் வாழுகின்ற சமுதாயத்தின் நிலை. இவற்றைப் பார்த்துக்கொண்டு இறை புத்திரர்களான எம்மால் மௌனமாக இருக்க முடியுமா?

## இரண்டாவது வெளிப்பாடு

உங்கள் நலனுக்காகக் கடவுளின் அருளால் எனக்களிக்கப்பட்ட பொறுப்பைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள் என் எண்ணுகிறேன்.....

## மூன்றாவது வேண்டுதல்

இயேசு கிறிஸ்து ஆண்டவரே, கண்ணுக்குப் புலனாகின்ற புலனாகாத அனைத்தினதும் தொடக்கமும் முடிவும் நீரே. யுகத்தில் ஆண்டவராகிய உமது அரசின் உரிமையாளராவதற்காக தேர்ந்துகொள்ளுமளவிற்கு நாம் பேறுபெற்றோரானோம். உமது அரசின் சாட்சியாளராவதற்காக எம்மை ஆவியானவரினால் திருப்பொழிவு செய்தருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011<br>முதலாம் வெளிப்பாடு | தை 03 திங்கள்<br>பதிலுரைப் பாடல் | இயேசுவின் திருநாமம்<br>நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| 1 யோவான் 3:22-4:6,<br>அல்லது பிலிப்பி 2:1-11 | திபா 2:7-8,10-12,<br>8:4, 6-9 | புனித மத்தேயு4:12-17,23-25,<br>புனித லூக்கா2 : 21 - 24 |

## நாளுக்குரிய சிந்தனை

இயேசுவின் திருநாமத் திருநாளை இன்று நாம் கொண்டாடுகின்றோம். உன்னதமிகு திரு நாமத்தினை உச்சரிக்கின்ற வேளையில் விடுதலை, மீட்பு, மகிழ்ச்சி எம் இதயங்களில் பெருகுவதனை நாம், எம் வாழ்வில் ஆழமாக உணர்ந்திருக்கின்றோம். இன்றைய வெளிப்பாடுகள் இயேசு ஆண்டவர் பெற்ற மகிமையின் பலனை வெளிப்படுத்துகின்றன. வார்த்தையானவர் எம் வாழ்வை ஆட்கொள்ள ஆவியானவரின் அருட்பொழிவினை வேண்டியவாறு எங்கள் அனுதின உணவை உட்கொள்வோம்.

## முதலாம் வெளிபாடு

*கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலை உங்களிலும் இருக்கட்டும்! கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவிற்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர் கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும்.*

## ஒளியின் விரிபுறுதல்

எம் கண்களை மூடியவாறு கிறிஸ்து ஆண்டவரை நோக்கி இருப்போம். 2011 ஆம் புது வருடத்தின் ஆரம்ப காலத்தில், திருநாமம் கொண்டவரின் மன நிலை எம்மையும் ஆட்கொள்ள இடமளித்தவாறு காத்திருப்போம்.

## அவருடைய மனநிலை என்ன?

*உயர் நிலையை பற்றிக் கொண்டிருக்கும் ஆசையை கைவிட்டார். கடவுள் மனிதரானார்.* வெறுமை அடைந்தார். அடிமையானார். எல்லோராலும் இழிவாகக் கருதப்பட்ட சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்டார். தம்மைத் தாழ்த்தினார். கீழ்ப்படிந்தார்.

அவருடைய மனநிலையை நான் பெற்றுக்கொண்டு, அவர் திருநாமத்திற்கு புகழ்பாடிட, நான் எதனைக் கைவிட வேண்டும். எதனைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

புபுது மக்களாகிய நாம் இயேசுவே ஆண்டவர் என்றும் வேறு எதற்கும் எம் வாழ்வில் முதலிடம் அளிக்க மாட்டோம் என்று வாக்குறுதி அளித்தவர்களாக, எம் வாழ்வை அவர் கரத்திற்கு ஒப்படைத்தோம். இந்த நிலை நிலைத்திருக்கின்றதா? எனச் சிந்தித்து தவறிச் சென்றிருப்பின் மன்னிப்பு வேண்டுவோம்.

எனது கௌரவத்தை மேன்மைப்படுத்தி வாழ்ந்தேனா? பிறரை மதிக்காமல் வாழ்ந்தேனா? தியானித்து மனம் வருந்தி, அவருடைய திரு இரத்தத்தினால் புனிதமடைந்து திருநாமத்தின் மகிமையைப் பறைசாற்றுவோம்.

## செபம்

இயேசு ஆண்டவரே! உமது நாமத்தினை பெற்றுக்கொள்ளும் வரப்பிரசாதமான நிலையை கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவருக்கும் அளித்தமைக்காக நன்றி கூறுகின்றோம். உமது மகிமைமிகு திருநாமம் மேன்மை பெற்றோங்க எம்மை வழிநடத்தியருளும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 தை 04 செவ்வாய்

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| 1 யோவான் 4 : 7 - 10 | தி. பா 72:1-4, 7-8, | புனித மாற்கு 6 : 34 - 44 |

## நற்செய்தியிலிருந்து

*அவர் கரையில் இறங்கியபோது பெருந்திரளான மக்களைக் கண்டார். அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவுகொண்டு அவர்களுக்கு பலவற்றைக் கற்பித்தார். .... நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள் என்று பதிலளித்தார். அவர்கள் நாங்கள் போய் இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கி இவர்களுக்கு உண்ணக் கொடுக்க வேண்டும் என்கிறீரா? என்று கேட்டார்கள். அப்பொழுது அவர் உங்களிடம் எத்தனை அப்பங்கள் இருக்கின்றன? போய் பாருங்கள் என்று கூற அவர்களும் பார்த்துவிட்டு ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன. என்றார்கள்*

## ஒளியில் விரிவுறுதல்

கிறிஸ்துவின் பரிவு இந்நற்செய்தியில் தெள்ளத்தெளிவாக விளங்குகின்றது. இறையன்பை விளங்கிக் கொள்ள முடியாத மக்களுக்கு ஆசிரியராக இருந்து கற்பிப்பதுடன் நல்ல வழிகாட்டியாக இருந்து வழி நடத்துகின்றார். அவர்கள் கேட்காமலே அவர்களுக்கு உணவுதேவை என்பதை உணர்ந்து உணவளிக்கின்றார். துதிக்கும் உதடுகளை விட உதவும் கரங்கள் மேலானவை என்று கூறுவார்கள். வார்த்தை புகழ்ச்சியுடன் செயல் புகழ்ச்சியும் மிக அவசியமென கிறிஸ்து செய்து காட்டினார். நாம் இறைவனுக்குள் வாழ்கின்றோம் என கூறிக்கொண்டு பிறர் மேல் அக்கறை இல்லாமல் இருக்கின்றோமா? எம்மையிட்டு சிந்திப்போம்.

## எம் பேரில்

இன்றைய நாளில் எல்லாவற்றிலும் பற்றாக்குறை இடநெருக்கடி, உணவில் பஞ்சம், சுகாதார சீர்க்கேடு என்று புலம்புகின்றோம். ஆனால் இறைவன் நிறைவாகவே படைத்துள்ளார். சிலர் பதுக்குவதால் பலர் வாட வேண்டியுள்ளது. ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களை கொடுக்கும் போது அவை அனைவரையும் போஷிக்க பண்ணுகின்றது. ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் இல்லாமலே கிறிஸ்துவால் உணவளித்திருக்க முடியும். ஆனால் பகிர்தலை செய்து காட்டியுள்ளார். இல்லை என்போர் இருக்கையிலே, இருப்பவர்கள் இல்லையென்பார். மடி நிறைய பொருள் இருக்கும் மனம் நிறைய இருளிருக்கும். எதுவென்ற போதும் பொதுவென்று வைத்து வாழ்வோரை நெஞ்சம் வாழ்த்தி நிற்கும். என்று கவிஞர் ஒருவர் கூறியுள்ளார். எம்மிடம் உள்ளதை இறைவன் பகிர்ந்து கொள்ள அழைக்கின்றார். பகிர்தல் என்றால் பொருட்களை பகிர்தல் என்று மட்டும் நினைக்க கூடாது. எமது திறமைகள், எமது நேரத்தை பிறருக்காக செலவிடல், ஆறுதலான வார்த்தைகள் எமது இறையனுபவத்தை பகிர்தல் என்று எத்தனையோ வழிகள் உண்டு. ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றை பகிர முடியும். என்னால் எதை பகிர முடியுமென சிந்திப்போம். என்னிடமுள்ளதை பகிர்ந்து கிறிஸ்துவின் வார்த்தையின்படி வாழ்வோம்.

## செபம்

இரக்கமும் கருணையும் நிறைந்த தேவனே! எனக்காக உம்மை நோக்கும் வேளை பிறரை நோக்கி பார்க்க தவறி விட்டேன். பிறர் வாழவும் பிறருக்கு உதவி செய்து வாழ வேண்டுமென்று எனக்கு கற்று தந்தமைக்காக நன்றி. பிறருக்காக நான் வாழவும் அதனால் உம்மை மகிமைபடுத்தவும் உமது ஞானமுள்ள ஆவியினால் என்னை வழி நடத்தும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 | தை 05 புதன் | |
|---|---|---|
| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
| 1 யோவான் 4 : 11 - 18 | தி. பா 72: 1- 2, 10 - 13 | புனித மாற்கு 6 : 45 - 52 |

## நற்செய்தியிலிருந்து

*இயேசு கூட்டத்தினரை அனுப்பிக் கொண்டிருந்தார். அப்பொழுது தம் சீடரையும் உடனே படகேறித் தமக்கு முன் அக்கரையிலுள்ள பெத்சாய்தாவுக்குச் செல்லுமாறு அவர் கட்டாயப்படுத்தினார். அவர் அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைக்குச் சென்றார்..... ஏனெனில் எல்லாருமே அவரைக் கண்டு அஞ்சிக் கலங்கினர். உடனே இயேசு அவர்களிடம் பேசினார். துணிவோடிருங்கள். நான் தான் அஞ்சாதீர்கள் என்றார். பிறகு அவர்களோடு படகில் ஏறினார். காற்று அடங்கியது.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

இறை தந்தையினது விருப்பங்களை கடுகளவேனும் தவறாது நிறைவேற்றியவர் இறை மகன் இயேசு ஆவார். அவர் முன் வைப்பவை நம் அனைவருக்கும் சவாலாக அமைகின்றது. உன்னதரான இறைவன் நமது மகனிடம் காட்டும் அளவற்ற அன்பைப் போலவே எம்மீதும் வரையறையற்ற அன்பினால் அன்பு செய்கின்றார். அதற்காக தம் மகனையே மீட்பராக உலகத்திற்கு அனுப்பினார். நாம், இயேசுவே இறைமகன் என ஏற்று அறிக்கையிடுவோமேயானால் கடவுள் நம்மோடு இணைந்திருப்பார். ஏனெனில் எல்லாருமே அவரைக் கண்டு அஞ்சிக் கலங்கினர். உடனே இயேசு அவர்களிடம் பேசினார். துணிவோடிருங்கள். நான்தான் அஞ்சாதீர்கள் என்று கூறினாலும் சீடர் அவரை புரிந்து கொள்ள வில்லை.

பழைய உடன்பாட்டுக் காலம் தொடக்கம் மக்களுள் கண்ணுக்குப் புலனாகாத விதமாக வெளிப்படுத்துகின்ற கடவுள் சீடர்கள் மத்தியில் இருந்தவாறு தம்மை வெளிப்படுகின்றார். அது மட்டுமன்றி இன்று நம் மத்தியில் வெளிப்படுகின்றார். அவரை இனங்காண்பதற்கு மனம் வருந்துதல் இன்றியமையாததாகும். அழைப்பின் பேரில் விழிப்புற்று பரிசுத்த ஆவியானவரோடு அவர் திருமுன் தோன்றி நிற்போம்.

## எம்பேரில்

கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை நாம் இனங் கண்டுள்ளோமா? உலக வாழ்வில் செயற்படும்போது ஆண்டவரோடு இணைந்து செயற்படுகின்றோமா? அவரோடு இணைந்து செயற்படும் போது வெளிப்படுகின்ற அன்பு கடவுளுடையது ஆகும். அந்த அன்பில் அச்சத்திற்கு இடமே இல்லை. இயேசு தான் மீட்பர் என நம்புவோர் அனைவரும் பேறுபெற்றவர்கள். அவர் கட்டளைகளைக் கடைப் பிடிப்பதில் தான் கடவுளின் அன்பு அடங்கியுள்ளது. நம் ஒவ்வொருவருள்ளும் உயிர்த்த ஆண்டவர் வீற்றிருக்கின்றார். அவரை ஒவ்வொரு கணமும் சந்தித்து உறவாடி அவர் விருப்பத்தை நிறைவேற்றி வாழ தூய ஆவியானவரது வல்லமையை கேட்டு செபிப்போம்.

## செபம்

அன்பான தந்தையே! எமது வாழ்விலும் நாம் உம்மைக் கண்டு பயந்து அலறுகின்றோம். இறைவனைத் தேடினால் சோதனைகள் வருகின்றது என்று உள்ளம் மழுங்கியவர்களாக உம்மைக் காண விருப்பமின்றி ஓடுகின்றோம். ஆனால் உம்மில் தான் வாழ்வு உண்டு என்பதை உணர்ந்து பாவ வழியில் செல்லாதவாறு உமது தெளிவை எமக்கு இயேசுவின் நாமத்தினால் தந்தருளும் ஆமென்.

***தம்மை நோக்கி மன்றாடும் ஏழைகளையும் திக்கற்ற எளியோரையும் அவர் விடுவிப்பார்.***

***(தி.பா. 72:12)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 தை 06 வியாழன்

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| 1 யோவான் 4: 19-5:4 | திரு.பா 72: 1-2, 14-17 | புனித லூக்கா 4:14-22 |

## நற்செய்தியிலிருந்து

*பின்பு இயேசு தூய ஆவியின் வல்லமை உடையவராய் கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்..... ஓய்வு நாளில் தொழுகைக் கூடத்திற்குச் சென்று வாசிக்க எழுந்தார். இறை வாக்கினர் எசாயாவின் சுருளேடு அவரிடம் கொடுக்கப்பட்டது. அவர் அதைப் பிரித்தபோது கண்ட பகுதியில் இவ்வாறு எழுதியிருந்தது. ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது.... இவர் யோசேப்பின் மகன் அல்லவா? எனக்கூறி எல்லோரும் அவரைப் பாராட்டினர். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

யோர்தான் நதியில் திருமுழுக்குடன் தூய ஆவியானவரின் வல்லமையைப் பெற்று தமது ஊராகிய நாசரேத்தில் உள்ள தொழுகைக் கூடத்திற்கு வந்த இறைமகனுக்கு எசாயா இறைவாக்கினரின் சுருளேட்டை வாசிக்கக் கொடுக்கிறார்கள். எசாயா இறைவாக்கினரின் ஒவ்வொரு வாக்குக்கும் விழிப்புறும் அவர், ஆரம்பத்தில் இருந்தே முழு மனித சமுதாயத்திற்கும் அன்பு காட்டும் இறை அப்பா அம்மக்களைப் பாவத்தில் இருந்து மீட்பதற்காக தம்மை இவ்வுலகிற்கு அனுப்பினார் என்பதைக் காண்கின்றார். அவரைப் பற்றி அப்பா தந்தையின் கனவு எசாயா இறைவாக்கினர் மூலம் வெளிப்படுவதைக் கண்டு பூரிப்படைகின்றார். அவர் தமது தூதுப் பணியை ஆரம்பிப்பதுடன் அப்பாவின் விருப்பத்தினை நிறைவேற்றிடத் தாகம் கொள்கின்றார். ஏழைகளுக்கு நற்செய்தியினை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வை அற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் அப்பா அவரை அனுப்பினார் எனக் காண்பதுடன் அப்பாவின் விருப்பத்தினை நிறைவேற்ற அவரின் உயிரையே தியாகம் செய்ய வேண்டும் என்பதைக் காண்கின்றார். அங்குள்ளவர்களைப் பார்த்து மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று என எடுத்துக் காட்டி அவர்களை வியப்புறச் செய்கின்றார்.

## எம் பேரில்

இறை அரசிற்கான மகனாக மகளாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட எமது வாழ்க்கையைத் திரும்பிப் பார்ப்போம். இயேசுவின் வழியைப் பின்பற்றும் மக்களாகவா வாழ்கின்றோமா? முதலாம் வெளிப்பாட்டில் கூறியது போல் கடவுளுக்கு அன்பு செலுத்துகிறோம் என்று கூறி எமது அயலவர்களுக்கு சகோதரர்களுக்கு சங்கத்தில் உள்ளவர்களுக்கு, தேசத்திற்கு அன்பு செய்கிறவர்களாவா வாழ்கின்றோம்? எமது பெலவீனங்களுக்கு விழிப்புற்று எம்மைப் புறக்கணிப்போர் வெறுப்போருக்கு, சகோதரர்களுக்கு, சங்கத்திற்கு, அயலவர்களுக்கு அன்பு செய்து அன்பின் ஊற்றாம் அப்பா தந்தையின் அன்பினை முழுமையாக அனுபவித்திட எம்மை வழிநடத்தத் தூய ஆவியானவருக்கு இடமளிப்போம்.

## செபம்

அன்பின் ஆண்டவரே! இறை அரசின் மகனாக மகளாக தேர்ந்தெடுத்தமைக்கு நன்றி தந்தையே! ஓய்வு நாளில் அதிகமதிகமாய் எமது தூதுப் பணிக்கு விழிப்புற்று உமது திரு விருப்பத்தினை நிறைவேற்றும் மகனாக மகளாக வாழ உமது பரிசுத்த ஆவியினால் எம்மை வழிநடத்தியருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை

2011 *தை 07 வெள்ளி*

மறைப்பணியாளர் தூய பெனாபோர்த்து இரேஸ்முத்து

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| 1 யோவான் 5:5-13 | திரு.பா 147:12-15, 19-20 | புனித லூக் 5:12-16 |

### நற்செய்தியிலிருந்து

***இயேசு ஓர் ஊரில் இருந்த போது, உடலெல்லாம் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவர் வந்தார். அவர் இயேசுவைக் கண்டு, அவர் காலில் விழுந்து ஆண்டவரே, நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும் என மன்றாடினார். இயேசு கையை நீட்டி அவரைத் தொட்டு நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக என்றார் உடனே தொழுநோய் அவரை விட்டு நீங்கிற்று. இயேசு அவரிடம் இதை யாருக்கும் சொல்ல வேண்டாம்.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)***

### ஒளியின் விழிப்புறுதல்

அன்பின் ஆண்டவரே! உமது அன்பின் ஆவியினால் என்னை நிரப்பி இந்த நற்செய்தியில் உமது உள்ளாந்தரத்தை அறிந்திட எனக்குத் துணை புரியும்

தொழுநோயாளரின் விசுவாசம் இன்றைய நற்செய்தியில் வெளிப்பட்டுள்ளது. *நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்* என்ற வார்த்தைகளின் வழியாக அவருடைய விசுவாசம் வெளிப்படுகின்றது. அதற்கு பதிலாக இயேசு ஆண்டவரின் செயல்பாடானது அவர் வல்லமை பொருந்திய இறை மகன் என்பதை உணர்த்துகின்றது. எத்தனையோ வருட காலமாக துன்புறுத்திக் கொண்டிருந்த தொழுநோயானது இறைமகன் கையை நீட்டி *நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக* என்று சொன்ன மாத்திரத்தில் குணமாகின்றது. மேலும் இயேசுவின் தாழ்ச்சி, தன்னடக்கம், கீழ்படிவு போன்ற நற்குணங்கள் இதை யாருக்கும் சொல்ல வேண்டாம் *நீர் போய் உம்மைக் குருவிடம் காட்டி, நோய் நீங்கியதற்காக மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையை செலுத்தும்* என்று கூறும் வார்த்தைகள் வழியாக அவருடைய நற்பண்புகள் வெளிப்படுகின்றது.

### எமது பக்கம்

எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் தூய ஆவியின் குணமளிக்கும் வரத்தைப் பெற்றிருந்தார். ஆரம்பத்தில் இறை அன்போடு நற்குணங்கள் கொண்டவராக துன்புறும் மக்களுக்கு ஆறுதலாக பணிசெய்து வந்தார். அதனால் ஏராளமான ஜனங்கள் அவரை நாடி குணம்பெறத் தொடங்கினார்கள். நாளடைவில் சாத்தான் அவரைப் பிடிக்க அவருக்கு தலைக்கனம் உருவானது. தான் வல்லமை மிக்கவர் என்ற ஆணவத்தில் சுய மகிமைக்காக செயல்படத் தொடங்கினார். செல்வமும் பெருகியது. ஏழை எளியவர்களை புறக்கணித்து, வருமானம் நிறையக் கிடைக்கும் நபர்களுக்கு முன்னுரிமை கொடுக்கத் தொடங்கினார். இறுதியில் ஒரு நடுச்சாமத்தில் சாத்தான் அடிக்கவே இவ்வுலகை விட்டு பிரிந்தார். இறைமகனாயிருந்தும் இயேசு கிறிஸ்துவின் செயல்பாடுகள் அனைத்தும் தந்தையின் மகிமைக்காகவே நடைபெற்றது. அப்பாவின் விருப்பத்தைத் தவிர வேறெதுவும் அவருக்கு இருக்கவில்லை.

### செபம்

அன்புத் தந்தாய்! நாமும் உமது அன்பு மகனைப் போன்று உமது மகிமைக்காக உமது விருப்பமறிந்து வாழ வேண்டிய ஞானத்தை தந்தருளும். யோவான் முதல் வெளிப்பாட்டில் கூறியுள்ளவாறு இயேசு கிறிஸ்துவை இறைமகன் என்று முழுமனதோடு நம்பி அவர் வார்த்தையின்படி வாழ்ந்து நிலை வாழ்வினைப் பெற்றிட வரமருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 தை 08 சனி

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| 1யோவான் 5: 14-21 | தி.பா. 149: 1 - 6, 9 | புனித யோவான் 3 : 22- 30 |

## நற்செய்தியிலிருந்து

*இவற்றுக்குப் பின்பு இயேசுவும் அவர் தம் சீடரும் யூதேயப் பகுதிக்குச் சென்றனர். அங்கே அவர் அவர்களோடு தங்கித் திருமுழுக்குக் கொடுத்து வந்தார். யோவானும் சலீம் என்னும் இடத்துக்கு அருகில் உள்ள அயினோனில் திருமுழுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏனெனில் அங்கு தண்ணீர் நிறைய இருந்தது. மக்கள் அங்கு சென்று திருமுழுக்கு பெற்று வந்தார்கள். யோவான் சிறையில் அடைக்கப்படுமுன் இவ்வாறு நிகழ்ந்தது. ஒருநாள் யோவான் சீடர் சிலருக்கும் யூதர் ஒருவருக்கும் இடையே தூய்மைச் சடங்குபற்றி விவாதம் எழுந்தது. அவர்கள் யோவானிடம் போய் ரபி யோர்தான் ஆற்றின் அக்கரைப்பகுதியில் உம்மோடு ஒருவர் இருந்தாரே நீரும் அவரைக் குறித்து சான்று பகர்ந்தீரே. இப்போது அவரும் திருமுழுக்குக் கொடுக்கிறார். எல்லாரும் அவரிடம் செல்கின்றனர் என்றார்கள். யோவான் அவர்களைப் பார்த்து விண்ணிலிருந்து அருளப்படாவிட்டால் எவரும் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது.....*

## ஒளியில் விழிப்புறுதல்

உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியானவரே உமக்கே புகழ்.

இறைவார்த்தைக்கு உள்ளாகும் போது யோவானுக்கு திருமுழுக்கு கொடுக்கும் அதிகாரம் விண்ணகத்திலிருந்தே வந்தது. விண்ணகத்திலிருந்து அருளப்படாவிட்டால் எவரும் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. நான் மெசியா அல்ல, அவருக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவர் என்று சான்று பகர்ந்து இயேசுவை உலகிற்கு அறிமுகப்படுத்துகிறார். இவரே உலகின் பாவம் போக்கும் பரிசுத்த செம்மறி என்று கூறுகிறார். இதைக் காணும் போது இறை அப்பாவின் அன்புக்கு பாத்திரமாக யோவான் திகழ்ந்திருப்பார். மணமகளின் தோழராய் அருகில் நின்று அவர் சொல்வதை கேட்கிறார். அதில் அவர் பெருமகிழ்ச்சியடைகிறார். என் மகிழ்ச்சியும் இதுபோன்றது. இம்மகிழ்ச்சி என்னுள் நிறைந்துள்ளது. அவரது செல்வாக்குப் பெருக வேண்டும் எனது செல்வாக்குக் குறைய வேண்டும் என்றார். இவர் வார்த்தையூடாக இயேசு நாதர் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதற்கு மெருகு ஊட்டப்பட்டவராக திகழ்ந்திருப்பார்.

## எம்மில் விழிப்புறுதல்

நாம் கேட்பது இறைவனின் திருவுளத்திற்கேற்ப அமைந்திருப்பின் அவர் எமக்கு செவிசாய்க்கிறார். நாம் கடவுளின் பிள்ளைகள். கடவுளிடம் இருந்து பிறந்தோர் பாவம் செய்வதில்லை. ஏனெனில் அவர் நம்மை பாதுகாக்கின்றார். இவ்வுலகம் தீயோனின் பிடியில் இருக்கிறது. நாங்கள் தீயோனின் பிடியில் சிக்கிக் கொள்ளாமல் சாவுக்குரிய பாவங்களில் விழாமல் யாராவது பாவத்தில் விழுந்தால் அவர்களுக்காகவும் மன்றாட நாம் செபிக்கக் கடமைப்பட்டுள்ளோம். பெலயீனரான நாம் மற்றவர்களை மன்னிக்கும் சுபாவம் உள்ளவர்களாய் இறை அன்பில் நிலைத்திருந்து கடவுளிடமிருந்து பெற்ற அன்பை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்போம். ஏனெனில் இறைவனின் கட்டளை அன்பே. இதுவே இறை நம்பிக்கையின் அறிகுறி இதை உணர்வோமா?

## செபம்

*ஆண்டவருக்கு புதியதொரு பாடல் பாடுங்கள். அவருடைய அன்பர் சபையில் அவரது புகழைப் பாடுங்கள்*

*(திரு. பா 149:1)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 *தை 09 ஞாயிறு* பொ.கா.1ம் ஞாயிறு இயேசுவின் திருமுழுக்கு

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|---|
| எசாயா 42 : 1 - 4, 6 - 7 | திரு.பாடல் 28 : 1 - 4, 9 - 10 | திரு. தூதர் 10 : 34 - 38 | புனித மத்தேயு 3 : 13 - 17 |

## அறிமுகம்

இயேசு கிறிஸ்து நாதருடைய திருமுழுக்கானது அவரது வாழ்க்கையைத் திசைதிருப்பிய முக்கியமானதொரு நிகழ்வாகும். அவர் திருமுழுக்கு யோவானினால் திருமுழுக்குப்பெற்ற போது, தந்தையானவர் தூய ஆவியானவரின்றி கிறிஸ்தவ வாழ்க்கையில்லை என்பதற்கு இது முக்கியமானதொரு சான்றாகிறது. அன்பார்ந்த மகன் என்று கூறுகின்ற போது மனதினைத் தேற்றுகின்ற வார்த்தையாக அமையாது, அர்ப்பணமாகுதல், பலியாகுதல், பணி புரிதல், மரணம் போன்றவற்றை நினைவு கூருவதாக அமையும் என்று கூறலாம். ஆவியானவரது வல்லமையின்றி இவையொன்றையும் செய்ய முடியாது என்பது உண்மையாகும்.

## முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

***இதோ! என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன். நான் தேர்ந்து கொண்டவர் அவர். அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது. அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன். அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்.***

## ஒளியில் விழிப்புறுதல்

நான் தேர்ந்து கொண்டவர் எதற்காகத் தேர்ந்து கொள்ளப்பட்டார்? மீட்பின் பணிக்காகவே தேர்ந்து கொள்ளப்பட்டுள்ளார். அது மிகவும் பாரதூரமானதொரு பணியாகும். அப்பணியானது குறிப்பிட்டதோர் இனத்தாருக்காக மாத்திரம் அமையாது. பிற இனத்தாருக்கும் ஒளியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன். பணியினை நிறைவேற்றுமுகமாக ஆவியை அவருள் தங்கும்படி செய்கின்றார். இயேசு அன்று யோர்தான் நதிக்கரையில் வெறும் நீரால் மாத்திரம் அன்றி ஆவியானவரனாலும் திருமுழுக்குப் பெற்றார். இன்று நாம் கொண்டாடுகின்ற விழா அதுவாகும். தூதுரைப் பணியைத் தொடங்குவதன் ஆரம்ப விழாவாகும். இத் திருமுழுக்கானது அவரது தனித்துவத்தை உறுதிப்படுத்துகின்றது. நாசரேத்தூர் இயேசு மகா உன்னதரது மகனாகின்றார். அவர் உரிமையாக்கிக் கொண்ட நற்செய்தியும் அதுவாகியது. அதாவது மனிதர்கள் அடிமைகளோ அல்லது வெறும் இறைபணியாளர்களோ மாத்திரமன்றி அவர்கள் இறைவனுடைய மக்களாவர் என்பதாகும். இதனை அனுபவிக்கின்ற, தமதாக்கிக் கொள்ளுகின்ற இடமே இறையரசாகும்; விண்ணரசாகும்.

எமக்குப் புத்திரத் தன்மையை உரிமையாக்கித் தருவதற்காக வேண்டி தமக்குரித்தான இறை மகிமை, இறை மாட்சிமையிலிருந்து வெறுமையாகி, அடிமையின் தன்மையினை ஏற்றுக் கொள்கின்றார். அவரது கீழ்ப்படிதல் காரணமாக நாம் உயர்த்தப்படுகிறோம். இயேசு ஆண்டவரே உமக்கே புகழ்.

## நற்செய்தியிலிருந்து

***...இயேசு திருமுழுக்குப் பெற்றவுடனே தண்ணீரை விட்டு வெளியேறினார். உடனே வானம் திறந்ததையும், கடவுளின் ஆவி புறா இறங்குவது போலத் தம்மீது வருவதையும் அவர் கண்டார். அப்பொழுது என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

*அப்போது பேதுரு பேசத் தொடங்கி கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை என்பதை நான் உண்மையாகவே உணர்கிறேன். எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து நேர்மையாகச் செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர். இயேசு கிறிஸ்து வாயிலாக அமைதி உண்டு என்னும் நற்செய்தியை அவர் இஸ்ரயேல் மக்களுக்கு அனுப்பினார். அவரே அனைவருக்கும் ஆண்டவர்....*

## ஒளியில் விரிபுறுதல்

இயேசு கிறிஸ்துநாதர் தமது பணியினை திருமுழுக்குடனேயே ஆரம்பிக்கின்றார். வாழ்க்கையின் முக்கியமான தொரு சந்தர்ப்பத்தின் விசேஷித்த திருமுழுக்கினைப் பெறுவதானது எத்துணை முக்கியமானதாக அமையும்? அதன் வழி அப்பா பிதாவின் அனுக்கிரகம் வழிந்தே வந்தது என்பது தெளிவாகும். அவர் சாதாரணமான மனிதனாக திருமுழுக்குப் பெறுவதற்கு முன் வந்தமையே தந்தையின் பூரிப்பிற்குக் காரணமாக அமைந்தது என்று கூறலாம்.

இவர் பெற்ற இந்த புத்திரத் தன்மையின் அனுபவமானது, வாழ்க்கை நிகழ்வுகளின் போது அவரை விட்டு பிரிந்து விடவில்லை. அவரது வாழ்க்கை நிகழ்வுகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்தது. இந்த அனுபவமேயாகும். இந்த அப்பா -மகன் உறவு எவ்வளவு ஆழமானதெனில், இந்த அன்பார்ந்த மகன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். தனது சொந்த விருப்பு வெறுப்புக்களைத் தந்தைக்காக வேண்டி அர்ப்பணமாக்கினார். அவரது புத்திரத்தன்மையின் அனுபவமானது கருங்கல்லில் பொறிகப்பட்ட எழுத்துக்களாக அமைந்திருந்தன. தீயவன் அவரைச் சோதிக்கும்போது கூட நீ இறைவனின் மகனானால் என்ற வார்த்தைகளையே பிரயோசனத்திற்கு எடுத்தான். பிதாமகன் இணைப்பே தீயவனுடைய அரசிற்குத் தடையாக இருந்தது.

## எம் பேரில்

நானும் இறைவனுடைய மகனாவேன். திருமுழுக்குப் பெற்ற நாளில் இந்தப் பரிசினைப் பெற்றேன். ஆயினும் எனது புத்திரத்தன்மையின் அனுபவம் எவ்வளவு பெலவீனமடைந்துள்ளது? நீரில் எழுதப்பட்ட எழுத்தாக அல்லவா இருக்கின்றது? முக்கியமானதொரு அனுபவத்தைப் பெறும் போது நான் இறைவனுடைய மகன்... மற்றைய நேரங்களில்? இயேசு ஆண்டவரே என்னைப் போன்றதொரு பாவி!!! எனது புத்திரத்தன்மையின் அனுபவமானது பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள புதையலைப் போன்றதாக இருக்கிறது...

ஆண்டவரே என்னை மன்னித்தருளும்...

## செபம்

அப்பா பிதாவே....

(பல தடவைகள் உச்சரித்தவாறு உங்களை முழுமையாக ஆட்கொள்வதற்கு இடமளிக்கவும்)

***நான் உம்மிடம் உதவி வேண்டுகையில், உமது திருத்தூயகத்தை நோக்கி கையுயர்த்தி வேண்டுகையில் பதில் அளித்தருளும்***

*(தி. பா. 28: 2)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 *தை 10 திங்கள்*

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 1:1-6 | திரு.பாடல் 97:1-2, 6-7, 9 | புனித மாற்கு 1:14-20 |

## நற்செய்தியிலிருந்து

*யோவான் கைது செய்யப்பட்டபின் கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டே இயேசு கலிலேயாவிற்கு வந்தார். காலம் நிறைவேறிவிட்டது இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது... மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்று அவர் கூறினார். அவர் கலிலேயக் கடலோரமாய்ச் சென்றபோது சீமோனையும் அவர் சகோதரரான அந்திரேயாவையும் கண்டார்... உடனே இயேசு அவர்களையும் அழைத்தார். அவர்களும் தங்கள் தந்தை செபதேயுவைக் கூலியாள்களோடு படகில் விட்டுவிட்டு அவர் பின் சென்றார்கள். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

மனம் மாறுங்கள், விண்ணரசு நெருங்கி விட்டது, என்று பறைசாற்றிய திருமுழுக்கு யோவானை கைது செய்யப்பட்டதை அறிந்ததும் கிறிஸ்து நாதரும் மக்களை மனம் மாறும்படி அழைக்கின்றார். சட்டம் என்ற வேலியைப் போட்டுக்கொண்டு பரிசேயர், சதுசேயர், சட்ட வல்லனர்கள் இறையன்பை வெளிப்படுத்தவில்லை. ஆனால் கிறிஸ்து மனித வல்லமையைக் கண்டு அஞ்சாமல் மனிதர்கள் மத்தியில் இறையரசை கொண்டு வருகின்றார். அதற்கு அவசியம் மனமாற்றம் என்பதையும் வலியுறுத்துகின்றார். இறையரசை பரப்ப ஊழியர்களை தெரிவு செய்கின்றார். கல்வி, மனித அந்தஸ்து, பண பலம், மனித வல்லமை என உலக கண்ணோட்டத்தில் ஊழியங்களை தெரிவு செய்யவில்லை. சேற்றிலே செந்தாமரை முளைக்கும் என்பது போல் ஒதுக்கப்பட்டோரிலிருந்து இறையரசை உருவாக்க முயல்கின்றார். இறையரசு அனைவருக்கும் உரியது. எவ்வித பாகுபாடுமற்றது என செயலில் வெளிப்படுத்துகின்றார்.

## எம் பேரில்

மனிதர்களை அதீத வலியினின்று காக்கும் குளோரபார்ம் கண்டு பிடித்த ஜேம்ஸ் சிம்ப்சனிடம் ஒருவர் கேட்டார். உங்களுடைய கண்டுபிடிப்பில் தலையானதாய் எதனை கருதுகின்றீர்கள்? குளோரோபாம் என்ற விடையைத் தருவார் என எதிர்பார்த்த கேள்வியாளருக்கு ஆச்சரியம் காத்திருந்தது. எனது மிகப்பெரிய கண்டுபிடிப்பு இயேசு எனது மீட்பராக இருக்கிறார் என்பதாகும் என்றாராம். இறையன்பை அதிகம் அனுபவித்ததால் தான் இக்கண்டுபிடிப்பாளர்க்கு மனிதர்களுக்கு ஏதோ நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்க வேண்டும். அன்று அவர்களை பெயர் சொல்லி அழைத்தது போல் என்னையும் இறைவன் அழைத்துள்ளார். இறைவனின் அன்பை அனைவரும் அனுபவிக்கும் போது இறையரசு எம்மத்தியில் உருவாகும். இன்று இவ் இறையரசுக்கு தடையாக இருப்பதென்ன என்று சிந்தித்தேன். நடந்து முடிந்த பழைய கசப்பான நிகழ்ச்சிகள், சுய கௌரவம் என்ற போர்வை, தாழ்மையற்ற நிலை, மன்னிக்க முடியாத நிலைமை போட்டி, பொறாமை இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். எம்முள் இருக்கின்ற தடைக்கற்களை இனம் கண்டு அவைகளை அகற்ற இறைவனிடம் வல்லமையைக் கேட்போம். எம்மத்தியில் இறையரசை உருவாக்குவோம்.

## செபம்

இரக்கமுள்ள தந்தையே! பெலவீனரான எம்மை தேர்ந்தெடுத்து உம் இறையன்பை எடுத்துரைக்க எம்மை அழைத்துள்ளீர். உம் தூய ஆவியின் வழி நடத்தலை தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 *தை 11 செவ்வாய்*

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 2 : 5 - 12 | தி.பா 8 : 1, 4 - 8 | புனித மாற்கு 1 : 21 - 28 |

## நற்செய்தியிலிருந்து

***அவர்கள் கப்பர் நாகும் ஊரில் நுழைந்தார்கள். ஓய்வு நாளில் இயேசு தொழுகைக் கூடத்திற்குச் சென்று கற்பித்து வந்தார்... அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி, அதிகாரத்தோடு அவர்களுக்குக் கற்பித்து வந்தார்... தொழுகைக் கூடத்தில் தீய ஆவி பிடித்திருந்த ஒருவர் இருந்தார்.... அவரை விட்டு வெளியேறிற்று. அவர்கள் அனைவரும் திகைப்புற்று, இது என்ன? இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாய் இருக்கிறது! இவர் தீய ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவையும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே! என்று தங்களிடையே பேசிக் கொண்டனர்.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)***

## ஒளியில் விழிப்புறுதல்

எங்கும் தங்கும் துணையாளரே; எல்லாம் கற்றுத்தரும் என் தேவனே! அக்கினியாய் என் மேல் இறங்கி வந்து இயேசுவின் உள்ளரங்கத்தைக் காண பெலவீனமான என்னை அபிஷேகம் செய்யும்.

தொழுகைக் கூடம் இறை தந்தையின் இல்லம். ஓய்வு நாள் பரிசுத்தமானது. எனவே தான் தொழுகைக் கூடத்திற்குள் சென்று மக்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றார். அதிகாரத்தோடு போதிக்கின்றார். அங்கே இறை அப்பாவின் வல்லமை வெளிப்படுகின்றது. அங்கிருந்த அசுத்த ஆவிகள் தாங்கிக்கொள்ள முடியாமையால்; பயம் உண்டாகி கத்துகிறது. இப்போதகர் யாரென்று இனங்காணுகின்றபடியால் இயேசுவே உமக்கு இங்கு என்ன வேலை? எங்களை ஒழித்து விடவா வந்தீர் என்று கூக்குரலிடுகின்றது. வாயை மூடு என்று அதட்டும்பொழுது அசுத்த ஆவியும் இயேசுவின் வல்லமைமிகு வார்த்தைக்கு அடங்கி வெளியேறுவதைக் காண முடிகின்றது. அசுத்த ஆவிகள் கூட ஓடி ஒழியும் அளவிற்கு அதிகாரமும் வல்லமையும் கொண்ட போதனை பற்றி மக்கள் கலவரப்படுகிறதைக் காணும் மகன், இறை தந்தையை எவ்வளவுக்கு மகிமைப்படுத்துகின்றார்! இறையரசைக் கட்டி எழுப்புகின்றார்.

## என்பேரில்

இயேசு யாரென்று சாத்தான் இனங்கண்ட அளவிற்கு இன்று மக்கள் எங்கே நிற்கின்றார்கள்? நெருக்கடிகள், இழப்புக்கள், நோய் நொடிகள் வரும் போது எங்களுடைய வீட்டிற்கு ஏதாவது செய்து போட்டார்கள் என்ற எண்ணம் உருவாகிய கணமே அசுத்த ஆவி பற்றி விட்டது. இயேசுவே உந்தன் வார்த்தையால் வாழ்வு வளம் பெறுமே. நாளுமே அன்புப் பாதையில் கால்கள் நடந்திடுமே வெறும் உதட்டினால் மட்டுமே பாடுகின்றோம். அந்த உயிர் தரும் வார்த்தை உள்ளத்தில் பதிய வைத்து வல்லமையோடு.... வாழ்ந்தால் பில்லி சூனியம் அல்ல அதைவிடப் பெரியது, கடைசியாக மரணம் நம்மைச் சூழ்ந்தாலும் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. ஆகவே இயேசுவின் நிழலில் மட்டுமே எமக்கு வாழ்வும் விடுதலையும் உண்டு என்ற நம்பிக்கையும் விசுவாசமும் கிடைத்திட தூய ஆவியானவரிடம் வரம் கேட்போம்.

## செபம்

நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு வேலை என்று தீய ஆவி கூறும் அளவிற்கு, வல்லமைமிகு வார்த்தைகளால் அதற்கு கட்டளையிட்ட இயேசுவே! கணத்துக்குக் கணம் அசுத்த சிந்தனைகளால், எண்ணங்களால் மாசுபடும் என்னையும் குணப்படுத்தியருள வேண்டுகின்றேன் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை

2011 தை 12 புதன்

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 2:14-18 | திரு.பா 105 : 1 - 4, 6-9 | புனித மாற்கு 1 : 29 - 39 |

### நற்செய்தியிலிருந்து

*பின்னர் அவர்கள் செபக் கூடத்தை விட்டு சீமோன் பெலவேந்திரன் இவர்களுடைய வீட்டுக்கு வந்தார்கள். யாகப்பரும் அருளப்பரும் அவர்களோடு சென்றனர். சீமோனுடைய மாமியார் காய்ச்சலாய்க் கிடந்தாள். உடனே.... அவள் அவர்களுக்குப் பணிவிடை செய்தாள். பொழுது போய் இரவானதும் நோயாளிகள், பேய்பிடித்தவர்கள்..... அதிகாலையில் கருக்கலோடு எழுந்து புறப்பட்டுத் தனிமையானதோர் இடத்திற்குச் சென்றார். அங்கே செபம் செய்து கொண்டிருந்தார். சீமோனும் அவருடன் இருந்தவர்களும் அவரைத் தேடிப் போயினர். அவரைக் கண்டு எல்லாரும் உம்மைத் தேடுகிறார்கள் என்றனர். அதற்கு அவர் அடுத்த ஊர்களுக்குப் போவோம் அங்கும் நான் தூது அறிவிக்க வேண்டும் இதற்காகவே வந்திருக்கிறேன் என்றார். அவ்வாறே கலிலேயா எங்கும் அவர்களுடைய செபக் கூடங்களில் தூது அறிவித்தும் பேய்களை ஓட்டியும் வந்தார்.*

### ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! இந்நற் செய்தி நிகழ்ச்சிக்குள் இயேசுவின் உள்ளாந்தரத்தைக் காண என்னை முழுமையாக உமது ஞான ஒளியினால் ஒளிமயமாக்கியருளும்

செபக்கூடத்தை விட்டு சென்ற இயேசு இராயப்பரின் வீட்டில் அவரின் மாமியாரைக் குணப்படுத்துகின்றார். இரவானதும் அவரிடம் கொண்டுவரப்பட்ட பலவிதப்பட்ட நோயாளர்கள், பேய்பிடித்தவர்கள் எல்லோரையும் குணப்படுத்தினார். பேய்களை ஓட்டினார். அடுத்த நாள் அதிகாலை கருக்கலோடு எழுந்து தனிமையான ஓரிடத்தில் தந்தையுடன் தொடர்பு கொண்டார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றத் தாகம் கொண்டு அடுத்த ஊர்களிலும் தாம் தூதுப் பணி செய்ய வேண்டும் என்பதை எடுத்துக்கூறினார். நான் வந்திருப்பது அதற்காகவே என்றார். நான் ஒரு இடத்ததுக்கு ஒரு சமூகத்துக்கு மட்டும் கட்டுப்பட்டவன் உரியவன் இல்லை என்பதைக் காட்டுகின்றார். இயேசு சீமோன் பேதுருவிடம் *என் பின்னே வா* என்று அழைப்புக் கொடுத்தாலும் பேதுரு இயேசு ஆண்டவரை வரும்படி அழைக்கின்றார். எனது தூதுப்பணி பாவிகளுக்கு மீட்பும், குருடருக்குப் பார்வையும், நோயாளருக்கு குணமும், கைவிடப்பட்டவர்களுக்கு ஆறுதலும் அளிக்கவே வந்தேனே தவிர எனக்கு மதிப்பு, மரியாதை பெற்று ஒரு இடத்தில் தங்கி இருக்கவல்ல என்று கூறினார்.

### எனது புத்திரத்தன்மை

நான் இவ்வுலகிற்கு வந்தது எதற்காக? இறைவன் என்னில் கொண்டுள்ள அளவு கடந்த அன்பிற்காகவே, இறைவனின் அன்புக்குப் பிரதிபலனாக என்னால் இறைவனுக்கு சாட்சி கொடுப்பதைத் தவிர வேறொன்றும் இல்லை என்ற தலைப்பிற்குப் பதில் கொடுப்பதானால் இயேசு காட்டியதைப் போல செய்வதற்கு, பிறருக்கு கட்டுப்பாடற்ற அன்பினால் அன்பு செய்ய வேண்டும்.

### செபம்

அன்பான தந்தையே! உமது மகன் எமக்காகத் தம் உயிரையே பரம பிதாவுக்கு ஒப்புக் கொடுத்தார். நானும் மற்றவர்களுக்காக பலியாகவும் இயேசு ஆண்டவரின் வழிசெல்லவும் அவர் காட்டியவாறு வாழவும் உமது தூய ஆவியானவரினால் எம்மை முற்றும் முழுதுமாக மூடிக்கொள்ளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 தை *13 வியாழன்* ஆயர், மறைவல்லுனர் தூய இலாரியார்

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 3 : 7 -14 | திரு.பா 95 : 6 - 11 | புனித மார்கு 1 : 40 - 45 |

## நற்செய்தியிலிருந்து

*ஒருநாள் தொழுநோயாளர் ஒருவர் இயேசுவிடம் வந்து நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும் என்று முழந்தால் படியிட்டு வேண்டினார். இயேசு அவர் மீது பணிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம் நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக என்றார். உடனே தொழுநோய் அவரை விட்டு நீங்க அவர் நலமடைந்தார். பிறகு அவரிடம் இதை யாருக்கும் சொல்ல வேண்டாம். கவனமாய் இரும். ஆனால் நீர் போய் உம்மைக் குருவிடம் காட்டி நோய் நீங்கியதற்காக மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையைச் செலுத்தும்... ஆனால் அவர் புறப்பட்டுச் சென்று இந்தச் செய்தியை எங்கும் அறிவித்துப் பரப்பி வந்தார்.*

## ஒளியில் விழிப்புறுதல்

இருளுக்குள் மூழ்கி இருந்த பூவுலகிற்கு அசைவாடி ஒளி கொடுத்த தூய ஆவியானவரே! எம் ஆண்டவர் இயேசுவின் உள்ளத்தினைக் காண்பதற்கும் இந்நற்செய்தியின் வார்த்தைகளைத் தியானிப்பதற்கும் என்னை வழிநடத்தியருளும்.

*நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்* இந்த வார்த்தைகளைக் கேட்ட இறை இயேசுவின் உள்ளம் பூரிப்பால் நிறைந்தது. ஏனென்றால் தொழுநோயாளி தன்னுடைய விருப்பத்தை விட இயேசுவின் விருப்பத்திற்கு முதலிடம் கொடுத்திருந்தார். சுயநலம் அவரிடம் இல்லாமல் இருந்தது. நான் என்ற நிலையில் இருந்து வெறுமையாகி, தாழ்மைக்குள் இருந்த அவரின் உள்ளத்தினை ஆண்டவர் கண்டார். எனவே அவனுடைய மேன்மையான பண்பை முன்னிட்டுக் குணமளிக்கின்றார். மோயீசனின் கட்டளைகளைக் கடைப்பிடித்த இயேசு கிறிஸ்து, தொழுநோயாளிக்கு அதைக் கடைப்பிடிக்குமாறும் சான்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் வலிவுறுத்துகின்றார். அத்தோடு காணிக்கை கொடுப்பதில் கரிசனமாக இருக்குமாறு பணிக்கின்றார். ஆண்டவர் ஒருவரிடமும் சொல்லாதே என்று கூறினாலும் அவர் ஆண்டவரின் மகிமையை வெளிப்படுத்துவதில் தாகம் கொள்கின்றார். எனவே அவர் மறைந்து வாழ முற்பட்டாலும் மக்கள் அவரைத் தேடி வருவதினைக் கண்டு உள்ளம் பூரிப்படைகின்றார்.

## எம்பேரில்

கிறிஸ்தவ மறுமலர்ச்சி மக்களாகிய எனக்கும், உங்களுக்கும் தொழுநோயாளிக்குள் இருந்த வெறுமை, தாழ்மை இருக்கின்றதா? என்னுடைய விருப்பத்தினை விட, மற்றவருடைய விருப்பத்திற்கு முக்கியத்துவம் அளித்து வாழ இடமளிக்கின்றேனா? சிந்திப்போம். அனைத்திலும் மரியன்னையைப் போல் வெறுமை, தாழ்மைக் கொண்டு வாழ்ந்து எமது மகா புபுதுவையையும், எமது புகழ்ச்சிக் கிராமத்தினையும் கட்டி எழுப்புவதில் தாகம் கொள்வோம்.

## செபம்

இயேசுகிறிஸ்து ஆண்டவரே! நீர் தந்தையின் விருப்பத்தில் வாழ்ந்தது போல, நாமும் எம்முடைய விருப்பத்தினைக் கைவிட்டு இறை தந்தையின் திருமுன்னே தோன்றி நின்றவாறு, *உமது விருப்பத்தைத் தவிர எனக்குவேறு எதுவும் இல்லை* என்ற வார்த்தைக்குள் வாழ வரம் தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்

*வாருங்கள் தாழ்பணிந்து அவரைத்*
*தொழுவோம். நம்மை உருவாக்கிய*
*ஆண்டவர் முன் முழந்தாளிடுவோம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 தை 14 வெள்ளி

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 4 : 1 - 5, 11 | திருபா 78 : 3 - 4, 6 - 8 | புனித மாற்கு 2 : 1 - 12 |

## நற்செய்தியிலிருந்து

*சில நாட்களுக்குப் பின் இயேசு மீண்டும் கப்பர் நாகுமுக்குச் சென்றார். அப்போது முடக்கு வாதமுற்ற ஒருவரை நால்வர் சுமந்து அவரிடம் கொண்டு வந்தனர்...... இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு முடக்குவாத முற்றவரிடம் மகனே உன்பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார். அங்கே அமர்ந்திருந்த மறைநூல் அறிஞர் சிலர்..... மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றார். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே வாரும். அசைந்தாடும். இறைமகனாம் இயேசுவின் உள்ளரங்கத்தைக் காண எம்மை முழுமையாக மூடியவண்ணம் வழிநடத்தும்

யோர்தான் நதியில் திருமுழுக்குடன் தூய ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட இயேசு அவர் மானிட மகன் மட்டுமல்ல இறைமகன் என்பதையும் எடுத்துக்காட்ட முன்வந்தார். முடக்குவாத முற்றவரைத் தூக்கிக்கொண்டு வருபவர்களின் விசுவாசத்தையும் சங்க வாழ்க்கையையும் கண்டு பூரிப்படைகின்றார். பாவத்தின் பிடியின் தாக்கத்தினால் நோய்வாய்ப்பட்டிருக்கும் முடக்குவாதக்காரனை அப்பா தந்தை அவருக்குக் கொடுத்துள்ள வல்லமையால் அவரைப் பார்த்து *மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.* படுக்கையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போ எனக் கூறி அப்பா தந்தையை மகிமைப்படுத்துகின்றார். மறைநூல் அறிஞர்களின் இருளடைந்த மனநிலையைக் காணும் அவர், அப்பா தந்தையின் திரு விருப்பத்தினை நிறை வேற்றுவும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதையுமே உணவாகக் கொண்ட அவருக்கு மறைநூல் அறிஞர் எழுப்பும் கேள்விகள் பெரிதாகத் தெரிய வில்லை. அவர்களைப் பார்த்து *மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கும் அதிகாரம் உண்டு* எனப் பயமின்றிப் பதிலளிக்கின்றார்.

## எமது பேரில்

இறை அரசின் மக்களாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட நாம் எமது அழைப்புக்கு விழிப்புறுகின்றோமா? கிறிஸ்தவர்களாகிய நாம் நோய்வாய்ப்பட்டு வேதனைப்படும் மக்களுடன் சங்கமாக அவரை இயேசுவிடம் எடுத்து வர முன் வருகின்றோமா? அவர்களின் பாவங்களுக்காக செபிக்கின்றோமா? எம்மை வழிநடத்த தூய ஆவியானவருக்கு இடமளித்து என்னுள் மறைந்திருக்கும் பாவங்களுக்கு விழிப்புற்று, தினம் தினமும் பேறுபெற்ற தாயாருடன் சிலுவை அடிவாரத்திற்குச் சென்று, எமது பாவங்களுக்கு மன்னிப்பை வழங்க சிலுவையில் தொங்கிக் கொண்டு இருக்கும் இயேசுவின் சரீரத்திலிருந்து வழிந்தோடிவரும் இரத்தத்தால், பேறுபெற்ற தாயாரின் மூலம் பரிசுத்தமாகி, பாவப்பரிகாரம் பெற்று புதிய படைப்பாவதற்குத் தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.

## செபம்

அன்பின் ஆண்டவரே! பாவிகளாகிய எம்மை உமது திருக்குமாரனின் இரத்தத்தால் கழுவி உமது மகனாக, மகளாக வாழ்வதற்கு எமக்கு அன்பு செய்தீரே, உமக்கு நன்றி அப்பா. அந்த வல்லமையினால் உமது திரு விருப்பத்தினை நிறைவேற்றும் மக்களாக வாழ உமது பரிசுத்த ஆவியினால் எம்மை அபிஷேகம் செய்தருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 *தை 15 சனி*

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப் பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 4 : 12 - 16 | திரு.பா 19 : 7 - 9, 14 | புனித மாற்கு 2 : 13 - 17 |

## நற்செய்தியிலிருந்து

*இயேசு மீண்டும் கடலோரம் சென்றார். மக்கள் கூட்டத்தினர் எல்லாரும் அவரிடம் வரவே அவர் அவர்களுக்குக் கற்பித்தார். பின்பு அங்கிருந்து அவர் சென்றபோது அல்பேயுவின் மகன் லேவி சுங்கச் சாவடியில் அமர்ந்திருப்பதைக் கண்டார். அவரிடம் என்னைப் பின்பற்றி வா என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். பின்பு அவருடைய வீட்டில் பந்தி அமர்ந்த போது, வரி தண்டுபவர்கள் பாவிகள் பலர் இயேசுவோடு விருந்துண்டனர்.... இவர் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்?.....*

## ஒளியின் விழிப்பு

இயேசுவின் உள்ளாந்தரத்தை நோக்கும் போது அவருடைய சிந்தனை, சொல், செயல் யாவும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் இறையரசைக் கட்டியெழுப்பும் நோக்கினைக் கொண்டு இருப்பதைக் காணலாம். அவருடைய கண்களுக்கு தென்பட்டவர்களை அவர் அழைக்கின்றார். அழைத்தவர்களோடு அவரும் பந்தியில் அமர்ந்து உண்டு குடித்து ஒற்றுமையாகின்றார். இறை தன்மையில் இருந்து வெறுமையாகி மனிதனோடு மனிதனாகின்றார். இதுவே இறைதிட்டம் என்பதை, அழைத்த நமக்கும் நற்செய்தியாக விட்டுச் சென்றிருக்கின்றார். உயர்ந்தவன், தாழ்ந்தவன், பாவி என்று வேறு பிரிக்கப்பட்டது அல்ல இறையரசு. அனைவரோடும் ஒற்றுமையாகி ஒரு மனமாய் ஒரே உடலின் அவயவங்கள் போல் வாழ்வது தான் இறையரசின் இலட்சணம் என்பதைத் தான் இன்றைய நற்செய்தி எமக்கு வெளிப்பா-டாக்கின்றது.

## எம்பேரில்

இன்றைய நற்செய்தி நமக்கு ஓர் சவாலாக அமைந்துள்ளது. அன்று சீடர்களை அழைத்தது போல் நம்மையும் பெயர் சொல்லி அழைத்துள்ளார். அன்று இயேசுவிற்குள் இருந்த ஒற்றுமையின் மனப்பான்மை இன்று நமக்குள்ளும் இருக்கின்றதா? இன்று நம்மை நாம் ஒரு கணம் திரும்பிப் பார்ப்போம். நமக்குச் சில பொறுப்புகள் கிடைத்தவுடன் நான் என்ற அகந்தைக்குள் நாம் வாழ்கின்றோமா? அகந்தை என்பது ஒரு தற்பெருமை. தூய ஆவியானவரால் உண்மையாக நாம் அழைக்கப்பட்டவர்களாக இருந்தால் வெறுமையின் பாடத்தைக் கற்றுக் கொள்வோம். இயேசு இறைதன்மையில் இருந்து வெறுமையாகியது போல நாமும் வெறுமையாகி ஒரே மனதோடு இறையரசைக்கட்டி யெழுப்புவோமாக.

## செபம்

இறைவா, நீர் படைத்த எல்லாப் படைப்புகளும் நீர் கட்டளையிட்டவாறே செயல்படுகின்றன. அவற்றிற்குச் சொல்லுமில்லை பேச்சுமில்லை. அவற்றின் குரல் செவியில் படுவதுமில்லை. ஆயினும் உம் சாயலாக நீர் படைத்த மக்களினம் உம் கட்டளைகளைக் கைவிட்டுத் தம் விருப்பம் போல் வாழ்கின்றனரே. ஆண்டவரே அவர்கள் செவிகளை நீர் திறந்தருளும். உம்முடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ வரம் அருளும் இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன் ஆமென்.

*என் கற்பாறையும் மீட்பருமான ஆண்டவரே!*
*என் வாயின் சொற்கள் உமக்கு*
*ஏற்றவையாய் இருக்கட்டும், என்*
*உள்ளத்தின் எண்ணங்கள் உமக்கு*
*உகந்தவையாய் இருக்கட்டும்*

*(தி.பா 19:14)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை

| முதலாம்வெளிப்பாடு | 2011 தை 16 ஞாயிறு பதிலுரைப்பாடல் | இரண்டாம் வெளிப்பாடு | பொ. கால 02வது ஞாயிறு, பாத். யோசேப் வாஸ் அடிகளாரின் நினைவு நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|---|
| எசாயா 49 : 3, 5 - 6, அல்லது தி. தூது 20 : 17-18, 28 - 32, 36 | திரு.பா 40:1, 3, 6-9 அல்லது 96:1-3, 6-8, 10 | I கொரிந்தியர் 1:1-3 | புனித யோவான் 1:29-34, அல்லது பு. மாற்கு 16:15-20 |

கடந்த ஞாயிறு தினத்தில் நாம் இறை மகன் இயேசுவின் திருமுழுக்கின் பெருவிழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடினோம். ஆவியானவரது திருப்பொழிவைப் பெற்ற போது அவர் பெற்ற இறைமகன் என்ற தனித்துவத்தைப் பற்றியும் தியானித்தோம். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் ஆண்டவர் என்னை எதற்காக அழைத்துள்ளார்? அந்த அழைப்பின் ஒலி, சவால் என்னைத் தொட்டுள்ளதா? உலக ஒலிகளால் நான் ஆட்கொள்ளப்பட்டுள்ளேனா? இந்த மாபெரும் அழைப்பிற்கு நான் எவ்வாறு பதிலளிக்கின்றேன்? எனது வாழ்க்கை முறை மற்றவர்களுக்குச் சாட்சி பகர்வதாக அமைந்துள்ளதா? என்னையே ஆவியானவருள் மீளப் பார்த்து ஆண்டவரது அழைப்பிற்குப் பதில் அளிப்பதற்கான தாகத்தையும், வல்லமையையும் வேண்டுவோம்.

### முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

***அவர் என்னிடம் நீயே என் ஊழியன், இஸ்ரயேலே! உன் வழியாய் நான் மாட்சியுறுவேன் என்றார்... யாக்கோபின் குலங்களை நிலை நிறுத்துவதற்கும் இஸ்ரயேலில் காக்கப்பட்டோரைத் திருப்பிக் கொணர்வதற்கும் நீ என் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்.***

### ஒளியில் விழிப்புறுதல்

ஆண்டவரிடமிருந்து இறைவாக்கினரான எசாயாவிற்கு வந்த ஒலி, அவதானமானதும் சவால் மிக்கதுமான நிலைக்கு அவரை அழைத்தது. அதாவது அவரது ஊழியனாவதற்கும், இஸ்ரவேலின் மீட்புக்குமான அழைப்பாகும். அது இலகுவான செயலாகாது. அடிமைக்கு எந்த விதமான உரிமையும் இல்லை. ஆண்டவரது அழைப்பும அத்தகையதானதாகும். எசமானின் கட்டளையை நிறைவேற்றுவதே அடிமைக்குரிய பணியாகும். இங்கு குறிப்பிடப்படுகின்ற ஊழியன் இறைவனுடைய மகிமையைத் தமது வாழ்க்கை வழி வெளிப்படுத்துவதோடு அனைவரினதும் மீட்பிற்கு ஒளியாகின்றார்.

புதிய உடன்பாட்டில் நாம் காணுகின்ற புதிய மோசே இயேசுவே. மகா உன்னதரான இறைவன் தமது திருத்திட்டத்தை அவர் வழியாகவே வெளிப்பாடாக்குகின்றார். தந்தையின் திருவுளத்தை, திருத்திட்டத்தை இனங்காணுகின்ற இறை மகனானவர், தந்தையை மக்களுக்கு வெளிப்படுத்துகின்ற, காண்பிக்கின்ற ஒளியானார். அவரிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற மீட்பானது தற்காலிகமானதல்ல. இறையரசுக்காக வேண்டி தம்மையே பலியாகக் கொடுத்த இயேசு ஆண்டவர் அன்றும், இன்றும் என்றும் தந்தையைக் காண்பிக்கின்ற ஒளியாவார். அவர் தமது புறக்கணிப்பு, துன்புறுதல், மரணம் என்பன வழியாக அனைத்து மக்களுக்கும் புத்துயிர் அளிக்கின்ற மீட்பின் வல்லமையை அளித்துள்ளார். இயேசு ஆண்டவரே! உமது வழி-யாக எமது பணியை இனங்கண்டு கொண்டு அதனை நிறைவேற்றுவதற்கான வல்லமையை ஆவியானவர் வழியாகத் தந்தருளும்.

### நற்செய்தியிலிருந்து

***மறுநாள் இயேசு தம்மிடம் வருவதைக் கண்ட யோவான் இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர். எனக்குப் பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர். ஏனெனில் எனக்கு முன்பே இருந்தார் என்று நான் இவரைப் பற்றியே சொன்னேன். இவர் யாரென்று எனக்கும் தெரியாதிருந்தது... ஆனால் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கும்படி***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்னை அனுப்பியவர் தூய ஆவி இறங்கி யார்மீது இருப்பதைக் காண்கிறீரோ அவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பவர் என்று என்னிடம் சொல்லியிருந்தார். நானும் கண்டேன். இவரே இறைமகன் எனச் சான்றும் கூறி வருகிறேன்.*

## ஒளியில் விரிபுறுதல்

இயேசுவைக் காண்பதற்கு தூய ஆவியானவரது திருப்பொழிவு மிக மிக அவசியமானதாகுமென யோவான் கூறுகின்றார். இந்தச் சாட்சியானது புதிய யுகத்தைப் பற்றிக் கண்ட சாட்சியாகும். இறை மகனைப் பற்றிய நற்செய்தியைத் தமது கண்களினாலேயே கண்ட யோவானைப் போல நாமும் பெற்றுள்ள ஆவியானவரது திருப்பொழிவு காரணமாக நாமும் உயிர்த்த ஆண்டவரைக் காண்கின்றோமா? எமது வாதாட்டங்கள், சிந்தனைகள் என்பனவற்றிற்கு அவரை வரையறுத்தவர்களாக, எமது அழைப்பினை மறந்துள்ளோமா? அரசிற்கான சிறு மந்தையாவதற்கான அழைப்பையே நாம் பெற்றுள்ளோம். எமது அழைப்பு அர்ப்பணமாவதற்கும், அடிமைத் தளைக்குமானதாகும். ஆயினும் விடுதலையான புத்திரத் தன்மைக்குமானதாகும்.

நாம் எமது வாழ்வின் ஒரே ஆண்டவராக இயேசுவை ஏற்றுக் கொண்ட நாளிலிருந்து இதுவரை காலமும் நாம் வாழ்ந்த வாழ்க்கையை மீளப்பார்த்து மனம் வருந்தி புதிய வாழ்வைத் தொடங்குவதற்கான வல்லமையை ஆவியானவரிடம் வேண்டுவோம்.

## இரண்டாவது வெளியாடு

*...இயேசு கிறிஸ்துவோடு இணைக்கப்பெற்றுத் தூயோராக்கப்பட்டு இறைமக்களாக அழைக்கப்பட்டுள்ள உங்களுக்கும், எல்லா இடங்களிலும் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை அறிக்கையிடும் யாவருக்கும் நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக! இயேசு கிறிஸ்து நமக்கு மட்டுமல்ல அனைவருக்கும் ஆண்டவர்.*

## ஒளியில் விரிபுறுதல்

இயேசு கிறிஸ்துநாதரின் மீட்பிற்குரிய மரணத்தின் வழியாக நிறுவப்பட்ட சங்கமானது, அவர் வழியாகப் பெற்ற அழைப்பினைப் பற்றி அக்களிப்புறுகின்றது. இறை விருப்பத்திற்கமைய அழைக்கப்பட்ட சங்கமானது தமது அழைப்பினை வெளிப்பாடாக்குகின்றது. பவுலடிகளார் உட்பட்ட சங்கமானது இறைவனுடைய திருத்தூதனாகும் அவர்களிடையே நிலவ வேண்டிய சகோதரத்துவம், ஒருமைப்பாடு, அனைத்திலும் உறுதியாக இருத்தல் என்பன ஆண்டவரது திருவுளமாகும் என பவுலடிகளார் கூறுகின்றார்.

இயேசு ஆண்டவரைச் சந்தித்த பவுலடிகளார் உட்பட்ட சங்கமானது, தமது வாழ்க்கை வழியாகச் சாட்சி பகர்ந்தவாறு அவரையே ஆண்டவராக ஏற்றுக் கொண்டு செப வாழ்வில் ஈடுபட்டிருந்தது. இன்று நான் எனது சங்கம் இருக்குமிடம்??? எமது குறிக்கோள், எமது பணி பற்றிய தெளிவு எமக்கிருக்கின்றதா? அதற்காக அர்ப்பணமாகியுள்ளோமா? எம் வழியாக மற்றவர்கள் உயிர்த்த ஆண்டவரைக் காண்கின்றார்களா?

## செபம்

இயேசு ஆண்டவரே, நீரே அப்பா தந்தையின் ஒப்புயர்வற்ற அன்பார்ந்த மகனானீர். நாமும் பெற்றுள்ள அந்த அழைப்பிற்கமைய பணியாற்றுவதற்கான வல்லமையையும், தெளிவையும் திடத்தையும் ஆவியானவர் வழியாகத் தந்தருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

*என் கடவுளே, உமது திருவுளம் நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். உமது திருச்சட்டம் என் உள்ளத்தில் இருக்கின்றது.*

*(தி.பா. 40 : 7)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 | தை 17 திங்கள் | ஆதீனத் தலைவர் தூய அந்தோனியார் நினைவு |
|---|---|---|
| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
| எபிரேயர் 5 : 1 - 10 | திரு.பா 110 : 1 - 4 | புனித மாற்கு 2 : 18 - 22 |

## நற்செய்தியிலிருந்து

*யோவானுடைய சீடரும் பரிசேயரும் நோன்பு இருந்து வந்தனர். சிலர் இயேசுவிடம் யோவானுடைய சீடர்களும் பரிசேயருடைய சீடர்களும் நோன்பிருக்க உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பிருப்பதில்லை? என்று கேட்டனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி மணமகன் தங்களோடு இருக்கும் வரை மண விருந்தினர்கள் நோன்பு இருக்க முடியுமா? மணமகன் அவர்களோடு இருக்கும் காலமெல்லாம் அவர்கள் நோன்பிருக்க முடியாது. ஆனால் மணமகன் அவர்களை விட்டுப் பிரிய வேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்..... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

கோயில் பூனை தேவனுக்கு அஞ்சாது என்ற பழமொழியைப் போல, கடவுள் பெயரால் மனிதர்களை துன்புறுத்தும் பரிசேயரை இயேசு கண்டார். அன்பே கடவுள் என்று உணர்த்திய கிறிஸ்துவை புரிந்து கொள்ள வில்லை. அவரது வேதனையையும் ஏற்றுக் கொள்ளவும் இல்லை. ஆனால் அவரது போதனையை ஏற்று பின் சென்றவர்கள் அவரிடம் வல்லமை இருப்பதை உணர்ந்தனர். இறைவன் நெருங்க முடியாது என்று பழைய சிந்தையை மாற்றி இறைவன் எமக்குள் இருக்கின்றார். நாமும் அவருக்குள் இருக்கின்றோம் என்ற புதிய சிந்தையை மக்களிடையே உருவாக்கினார். அத்தோடு நமது மரணத்தையும் முன் குறித்து பேசுகின்றார். அதை விளங்கிக்கொள்ள பரிசேயருக்கு ஞானமிருக்க வில்லை. தந்தையுடன் இணைந்திருந்ததால் ஒவ்வொரு செயலிலும் தந்தையை மகிமைப்படுத்தினார். இதனால் அவரது மரணத்தை கூட ஏற்றுக்கொள்ள முடிந்தது.

## எம் பேரில்

கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டதன் பின் எமது வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும். அர்ப்பணித்த நாளில் இருந்த உற்சாகம் இப்போது இருக்கின்றதா? என என்னை நானே வினவினால் இல்லை என்றே பதில் வரும். முன்பும் எனக்கு பல தேவைகள் இருந்தும் ஆண்டவரை உற்று நோக்கினேன். எனக்குள் தளர்ச்சி ஏற்படவில்லை. இப்பொழுது சூழ்நிலைகளையும் தேவைகளையும் அதிகம் நோக்குவதால், எனக்குள் சோர்வு ஏற்பட்டு உள்ளதை கண்டுக் கொண்டேன். எதிர்காலப் பயம் என்னை சூழ்ந்திருப்பதையும் உணருகின்றேன். *இயேசு எனக்கு தலைவராய் இருக்கின்றார். யாருக்கு நான் அஞ்ச வேண்டும். இயேசு எனக்கு மேய்யராய் இருக்கின்றார். வேறு எனக்கு என்ன வேண்டும்...* என்று பாடலை பாடும் நான் அனுபவிக்க மறந்து விட்டேன். இன்றைய நாளில் ஆண்டவர் நானிருக்கும் நிலையை எனக்கு தெளிவுபடுத்தினார். புதிய சித்தையில் பழையதை ஊற்றிக் கொண்டிருப்பதை கண்டுக் கொண்டேன். ஐவகை மொழிதலில் கூறுவதை போல நான் இயேசுவிடம் இருக்கின்றேன் என்பதை உரிமையாக்கி கொண்டேன். இன்றைய நாளில் புதிய சிந்தனையை தந்த இறைவனுக்கு கோடான கோடி நன்றிகள்.

## செபம்

அன்பின் தேவனே! எங்கள் வாழ்க்கை ஓட்டத்தில் முகம் கொடுக்கின்ற பெலவீனத்தில் உம்மை மறந்து விட்டேன். நீரோ என்னை பின் தொடர்ந்து அன்பு செய்வதற்காக நன்றி என்றும் உம்மோடு இணைந்து வாழ உமது தூய ஆவியின் வல்லமையைத் தந்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 தை 18 செவ்வாய்

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 6 : 10 - 20 | திரு.பா 111:1-2, 4-5,9-10 | புனித மாற்கு 2 :23-28 |

## நற்செய்தியிலிருந்து

*ஓய்வு நாளில் இயேசு வயல் வழியே செல்ல நேர்ந்தது. அவருடைய சீடர் கதிர்களைக் கொய்து கொண்டே வழிநடந்தனர். அப்பொழுது பரிசேயர் இயேசுவிடம் பாரும் ஓய்வு நாளில் செய்யக்கூடாததை ஏன் இவர்கள் செய்கிறார்கள்? என்று கேட்டனர். அதற்கு அவர் அவர்களிடம் தாமும் தம்முடன் இருந்தவர்களும் உணவின்றிப் பசியாய் இருந்த போது தாவீது என்ன செய்தார் என்பதை நீங்கள் வாசித்ததே இல்லையா? அபியத்தார் தலைமைக் குருவாய் இருந்த போது தாவீது இறை இல்லத்திற்குள்....*
*(நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! இந் நற்செய்தி வாசகத்தைப் புரிந்து கொள்ள அனைவரையும் உம் ஒளியினால் நிரப்பியருளும்.

இயேசு சீடர்களுடன் வயல் வழியாகச் செல்ல நேரிட்ட போது சீடர்கள் வழியோரத்தில் கதிர்களைக் கொய்தார்கள். பரிசேயர் இதில் குற்றம் காண, அவர்களின் மன நிலையைக் காணும் இயேசு அளித்த பதிலோ பரிசேயரின் உள்ளத்தையும் ஆன்மாவையும் ஸ்பரிசித்தது. ஓய்வு நாள் மனிதனைத் துன்பப்படுத்தவல்ல, இறைவன் பால் அன்புடன் அணைத்துக்கொள்ளவே உண்டாக்கப்பட்டது. இறை அரசே தம் உணவாகக் கொண்ட இயேசு, இதுவே மற்றவர்களின் உணவாக வேண்டும் என்று தாகம் கொண்டார். இறை தந்தையின் சகல படைப்புக்களினதும் மகிமையையும் மாட்சிமையையும் தம் உள்ளத்தில் பிரகாசிப்பதால் ஓய்வு நாளும் மானிட மகனுக்கும் கட்டுப்பட்டதே என்று கூறுகின்றார். மோசேயின் சட்டங்களைவிட இயேசுவின் அன்பு மேம்பட்டது என்பதை அவர் வார்த்தைகள் உறுதிப்படுத்துகின்றன. தன்னலம் துறந்து வாழக் கற்றுக் கொடுக்கும் இயேசுவின் வார்த்தைகள் பரிசேயருக்கும் ஓர் சவாலை ஏற்படுத்தியதால் இயேசுவை நாம் நமஸ்கரிப்போம்.

## எம் பேரில்

இயேசுவின் பின்னால் நாம் செல்வதற்கு அழைப்புப் பெற்றுள்ள இப்பயணத்தை இன்று எவ்விதம் தொடர்கின்றோம் என்பதைப் பற்றி சிந்தித்துள்ளோமா? அவரை நோக்குங்கள், மகிழ்ச்சி அடைவீர்கள்; வெட்கத்தால் தலைகுனிய மாட்டீர்கள் என்ற அருள் வாக்கை தாவீது மொழிந்துள்ளாரன்றோ. நாம் அவர் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து பயணம் செல்லும் போது நமக்கு ஏற்படுகின்ற முடியாமை, சோர்வு, தனிமை, பாழ்வெளி அந்தகாரம், பவத்தின் விளைவு எவருமில்லாமை போன்ற பல தடைகள் நம் வாழ் நாளில் பயணத்திற்குத் தடைகல்லாக இருக்கும். அன்று பரிசேயர் குறை கண்ட போது இயேசு தகுந்த பதிலளித்தது போல, நாமும் நம் தடைகளுக்கு எவ்விதம் பதிலளிக்கின்றோம். நமக்கு வலுவூட்டும் கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள வரம் வேண்டுவோமாக.

## செபம்

எம் அன்பு தெய்வமே! இறைவா உம் உயிருள்ள வார்த்தைகள் என்னும் கதிர்களை என் ஆன்மா சக்தி பெறுவதற்கு நாளுக்கு நாள் எமக்கு பகிர்தளித்த வண்ணமே இருக்கின்றீர். உம் திருமகனை ஏற்று அவருக்குச் சாட்சி பகருவதற்கு ஏற்ற வல்லமையை உம் தூய ஆவியானவரின் அருட் கொடையால் எம்மை நிரப்பி ஆசீர்வதிக்க வேண்டும் என்று கேட்கின்றோம். இயேசுவின் நாமத்தில் ஆமென்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 தை 19 புதன்

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 7:1-3, 15-17 | திரு.பா 110:1-4 | புனித மாற்கு 3:1-6 |

## நற்செய்தியிலிருந்து

*அவர் மீண்டும் தொழுகைக் கூடத்திற்குள் சென்றார். அங்கே கை சூம்பியவர் ஒருவர் இருந்தார். சிலர் இயேசு மீது குற்றம் சுமத்தும் நோக்குடன் ஓய்வு நாளில் அவர் அவரைக் குணப்படுத்துவாரா? என்று கூர்ந்து கவனித்துக் கொண்டே இருந்தனர். இயேசு கை சூம்பியவரை நோக்கி எழுந்து நடுவே நில்லும் என்றார். பின்பு அவர்களிடம் ஓய்வு நாளில் நன்மை செய்வதா? தீமை செய்வதா? உயிரைக் காப்பதா? அழிப்பதா? எது முறை? என்று அவர் கேட்டார். அவர்களோ பேசாதிருந்தார்கள். அவர் சினத்துடன் அவர்களைச் சுற்றிலும் திரும்பிப் பார்த்து அவர்களது பிடிவாத உள்ளத்தைக் கண்டு வருந்தி கை சூம்பியவரை நோக்கி கையை நீட்டும் என்றார். அவர் நீட்டினார், அவருடைய கை நலமடைந்தது. உடனே பரிசேயர் வெளியேறி ஏரோதியரோடு சேர்ந்து இயேசுவை எப்படி ஒழிக்கலாம் என அவருக்கு எதிராக சூழ்ச்சி செய்தனர்.*

## ஒளியில் விழிப்புறுதல்

பரிசேயர் இயேசுவை பல கேள்விகளோடு எதிர்கொண்ட சம்பவங்கள் பல. ஆனால் அனைத்திலும் அவர்களின் கை ஓங்கவில்லை. இயேசு அனைத்துக் கேள்விகளுக்கும் உரிய பதிலை கொடுக்கிறார். அத்துடன் செயலிலும் காட்டுகிறார். இயேசு கை சூம்பியவரை நோக்கி எழுந்து நடுவே நில்லு கையை நீட்டும் என்று கூற கை குணமடைந்தது இயேசுவின் மனநிலையை பார்ப்போமானால் அவரின் அன்பு, இரக்கம், பரிவு மூலமாக மனிதனின் சரீர வாதைகளை குணப்படுத்துகிறவராக இருக்கிறார். ஓய்வு நாளும் கடவுளுக்கு உரியது. இயேசு திருச்சட்டத்தின் கட்டளைப்படி மனித இயல்புக்கு ஏற்ப அல்ல அழியாத வாழ்வின் வல்லமையால் குருவாக தோன்றினார். இவரைப் பற்றி மெல்கிசதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே என்று சான்று உரைக்கப்பட்டுள்ளது.

## எம் பேரில்

இயேசுவுடன் நான் ஒன்றித்திருந்தால் நோயுற்றவர்களுக்கு உதவி செய்யவோ ஊனமுற்றவர்களுக்கு, ஏழைகளுக்கு உதவும் வேளையில் மனிதர் மூலம் வரும் தடைகளை உடைத்து எறிந்து இரக்கச் செயல்கள் மூலமாக ஆறுதலான வார்த்தைகள் மூலமாக எத்தருணத்திலும் இறை வல்லமையுடன் செயல்பட முடியுமாகும்.

## செபம்

ஆண்டவரின் இரக்கத்தில் உங்கள் உள்ளம் மகிழ்ச்சி கொள்வதாக, குறித்த காலத்துக்கு முன்பே உங்கள் பணிகளை செய்து முடியுங்கள். அவ்வாறாயின் குறித்த காலத்தில் கடவுள் உங்களுக்கு பரிசு வழங்குவார். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

*வலிமைமிகு உமது செங்கோலை ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார். உம் எதிரிகளிடையே ஆட்சி செலுத்தும்!*

*(தி.பா 110 : 2)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 தை 20 வியாழன் மறை சாட்சியர் தூய செபஸ்தியார், தூய பேபியன்.

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 7 : 25 - 8: | திரு.பா 40 : 6 - 8, 10 - 17 | புனித மாற்கு 3 : 7 - 12 |

## நற்செய்தியிலிருந்து

*இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தம் சீடருடன் கடலோரம் சென்றார். கலிலேயாவிலிருந்து பெருந்திரளான மக்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். மேலும் யூதேயா, எருசலேம், இதுமேயா, யோர்தான் அக்கரைப் பகுதி, தீர், சீதோன் ஆகிய இடங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் அவர் செய்தவற்றை யெல்லாம் கேள்வியுற்று அவரிடம் வந்தனர். மக்கள் கூட்டம் தம்மை நெருக்கி விடாதவாறு தமக்காக படகு ஒன்றை முன்னேற்பாடாக வைத்திருக்குமாறு அவர் சீடருக்குச் சொன்னார். ஏனெனில் பலரை அவர் குணமாக்கியதால் நோயுற்றோர் அனைவரும் அவரைத் தொட வேண்டு மென்று வந்து அவர் மீது விழுந்து கொண்டிருந்தனர்...*

*(நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விரிவுரைகள்

அன்பின் ஆவியானவரே! அன்பு இயேசுவின் அன்பின் செய்தியை நான் சரியான முறையில் அறிந்திட எனக்கு உதவி புரிந்தருளும்.

அப்பா பிதாவின் விருப்பத்தை நிறைவேற்றிட மனித மகனாகப் பிறந்த இயேசு ஒரு சிறு பொழுதையாவது வீணாக்காமல் தன் பிறப்பின் அர்த்தத்தை உணர்ந்து அதனை நிலைநாட்டிட மக்களின் நல் வாழ்விற்காக அயராது பாடுபடுவதை இன்றைய நற்செய்தியில் காணக் கூடியதாக இருக்கிறது. அவரது வல்லமை மிகு நற்செயல்களானது மக்கள் அவர் மீது நம்பிக்கையும் ஆவலும் கொண்டு அவரைத் தொட வேண்டுமென்ற அவாவும் அவரைப் பின்தொடர வேண்டும் என்ற உற்சாகத்தை அவர்களுக்கு ஏற்படுத்துகிறது. ஏன் தீய ஆவிகள் கூட அவர் இறைமகன் என்று தெரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு அவரது வல்ல செயல்கள் வெளிப்படுகின்றன. ஆனால் அவர் அதனை தனது மகிமைக்காகப் பயன்படுத்திக் கொள்ளாமல் இதனை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று கண்டிப்பாகக் கூறுகின்றார். மேலும் முதல் வெளிப்பாட்டில் புனித சின்னப்பர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி மேலும் தெளிவு படுத்துகிறார். அவர் வழியாக வருபவரே கடவுளை அடைய முடியும் என்றும் உயிரோடிருக்கும் அவர் எவ்வேளையிலும் எமக்காக பரிந்துரைப்பவராக இருக்கிறார் என்றும் கூறுகின்றார். மேலும் தூயவர் கபடற்றவர், மாசற்றவர், பாவிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு வானங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவர். புதிய உடன்படிக்கையின் தலைமைக் குரு இயேசுவே. அவரே எமது இணைப்பாளராக இருப்பதனால் முந்திய உடன்படிக்கையை விட புதிய உடன்படிக்கையே சிறப்பு மிக்கது என்பதையும் உணர்த்துகிறார். தூய ஆவியானவரில் விழிப்புற்று இறைவார்த்தையை ஆர்வத்தோடு வாசித்தோமாயின் அதன் ஆழமான அர்த்தத்தை எம்மால் உணர முடியும்.

## செபம்

அன்பின் ஆண்டவரே! வெறுமனே புதுமைகளுக்காக, சுயநலங்களுக்காக இறைவனை நாடி ஓடாமல், இறைவார்த்தையின் மூலம் வெளிப்படும் உமது அன்பின் ஆழத்தை அறிந்திட எமக்குத் துணை புரியும். அதன் மூலமே அனைத்து நிகழ்வுகளிலும் மீட்பினை அனுபவிக்க முடியும் என்னும் தெளிவினை உமது வல்லமைமிக்க ஆவியின் மூலம் ஒவ்வொருவருக்கும் உணர்த்தியருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை

2011 **தை 21 வெள்ளி** தூய அக்னஸ் நினைவு

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 8 : 6 - 13 | திரு.பா 85 : 8, 11 - 14 | புனித மாற்கு 3 : 13 - 19 |

### நற்செய்தியிலிருந்து

*அதன் பின்பு இயேசு மலைமேல் ஏறித் தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார். அவர்களும் அவரிடம் வந்தார்கள். தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும், பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் அவர் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்தார். அவர்களுக்குத் திருத்தூதர் என்று பெயரிட்டார். அவர் ஏற்படுத்திய பன்னிருவர் முறையே பேதுரு என்று அவர் பெயரிட்ட சீமோன்.... இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு ஸ்கரியோத்து என்போர் ஆவர்.*
*(நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

### ஒளியில் விழிப்புறுவோம்

அந்நாள்களில் அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு அவர் கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார். திருத்தூதர்களை தேர்ந்தெடுத்தல் நிகழ்வில் தமது பணி பரவலானது மிகவும் விரிவானது. தமக்குப் பின்பு இப்பணிக்குப் பலர் தேவைப் படுபவர் என்று உணர்ந்தவாறு பணிக்குத் தேவையான பணியாளரைத் தமக்குத் தரும்படி வேண்டியதன் பிரதிபலனாக இது அமையலாம். தந்தை தருபவர்களது திறமைகளோ, ஆற்றல்களோ, பெலவீனங்களோ, தகுதியோ முக்கியமாகாது. தந்தைக்கு அடிபணிவதே இறைமகனது குறிக்கோளாக அமைந்திருந்தது. பாறை எனப் பெயரிடப்பட்ட சீமோன் இடியைப் போன்றோர் எனப்பொருள் படும் யாக்கோபு, யோவான், காட்டிக் கொடுத்த யூதாஸ் ஸ்காரியோத்து போன்ற பல குணவியல்புள்ளவர்களுடன் பணிபுரிவது அவ்வளவு இலகுவானதாகாது என்ற தெளிவு இயேசுவுக்கு இருந்த போதிலும், பணிக்குத் தேவையான வல்லமையையும், வழிகாட்டுதலையும், தந்தையார் தமக்குத் தந்தருள்வார் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. அவர் எத்துணை தூரம் இறையன்பில் நிறைந்திருந்தார் என்பதற்கு, அவர்களது தீச்செயலை நான் இரக்கத்தோடு மன்னித்து விடுவேன் அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவு கூரமாட்டேன் என்ற கூற்று சாட்சியாகின்றது.

மக்கள் தம் சீடர்களைப் பற்றி என்னதான் கூவார்களோ என்ற நினைவு கூட அவருள் எழவில்லை. இறைபுத்திரத் தன்மையினால் அவர்களை அலங்கரிக்கின்றார். ஆவியானவரது வல்லமையால் திடப்படுத்துகின்றார். சீடர்கள் உலகைச் சார்ந்தவர்களோடு வாழ்ந்த போதிலும், அவர்கள் உலகினை மேம்பட்டவர்கள் என்று கருதுகிறார் நல்லதையே ஆண்டவர் அருள்வார் என்ற உறுதிப்பாடு அவருள் நிலை கொண்டிருந்தது.

### எம் பேரில்

நாம் பெற்றுள்ள அழைப்பின் பேரில் விழிப்புறுவோம். எனது சங்கத்தில் இறை அரசிற்குப் பணி புரிவதற்காக ஆண்டவரால் தேர்ந்து கொண்டுள்ளவர்களுடன் பணி புரிகையில் ஏற்படுகின்ற ஏற்பட்டுள்ள அனுபவத்தை மீளப் பார்ப்போம். நான் என்ற மமதையிலா நான் பணிபுரிகின்றேன். ஆவியானவரே எனது உண்மையான நிலையை எனக்குக் காண்பித்தருளும். அதனை ஏற்றுக் கொள்வதற்கான வல்லமையைத் தந்தருளும்....

### செபம்

ஆண்டவரே, உமது பேரன்பை எனக்கு காட்டியருளும். உமது மீட்பை எங்களுக்கு தந்தருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை

| | | |
|---|---|---|
| | 2011 *தை 22 சனி* | திரு தொண்டர், மறை நாட்சி தூய வின்சென்ட். |
| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
| எபிரேயர் 9:2-3, 11-14 | திரு.பா 47:2-3, 6-9 | புனித மாற்கு 3:20-21 |

### நற்செய்தியிலிருந்து

***அதன்பின் இயேசு வீட்டுக்குச் சென்றார். மீண்டும் மக்கள் கூட்டம் வந்து கூடியதால் அவர்கள் உணவு அருந்தவும் முடியவில்லை. அவருடைய உறவினர் இதைக் கேள்விப் பட்டு அவரை பிடித்துக்கொண்டு வரச் சென்றார்கள். ஏனெனில் அவர் மதி மயங்கி இருக்கிறார் என்று மக்கள் பேசிக்கொண்டனர்.***

### ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! இன்றைய நற்செய்தி வசனங்கள் இரண்டாக இருந்தாலும் அதை விளங்கிக் கொள்வதற்கு தூய ஆவியின் துணையை தாரும்.

இயேசு இரவு பகலாக தந்தையின் அரசுக்காக உழைக்கும் பணியில் கடுமையாக செயல்படுகிறார். பசி, நித்திரை, ஓய்வு என்பன அவருக்கு தேவைப்பட்டிருக்கும். அப்படியிருந்தாலும் இயேசு தந்தையின் அரசுக்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றார். இயேசு இறைமகனாக இருந்தாலும் எங்களைப் போல சாதாரண மனித மகனாகவே இருந்தார். அவர் வீட்டுக்குச் செல்கிறார். ஆனால் அங்கேயும் மக்கள் கூட்டமாக இருக்கின்றார்கள். அவரால் உணவு அருந்தவும் முடியாமல் போகிறது. அவர் களைப்படைகின்றார். ஒரு சிலர் இவர் மதிமயங்கி இருக்கிறார் என்று பேசுவதை கேள்விப்படும் அவருடைய உறவினர்கள் இயேசுவை கூட்டிச் செல்ல பார்க்கிறார்கள்.

### என் பேரில்

சில நேரங்களில் நாங்கள் எங்களுக்கு வரும் பிரச்சனைகளின்போது, இயேசு இறைமகன்தானே அவரால் எல்லாப் பிரச்சனைகளையும் தாங்கிக் கொள்ள முடியும் என்றும், நாங்கள் சாதாரண மக்கள் அதனால் பிரச்சனைக்கு எங்களால் எப்படி முகம் கொடுக்க முடியும் என்று சிந்திப்பதுண்டு. அப்படியில்லை. தூய ஆவியால் யார் இயக்கப்படுகிறார்களோ அவர்கள் இறைமக்கள். அவர்கள் ஆவியானவரின் வல்லமையைப் பெற்றிருப்பதால் அனைத்திற்கும் முகம் கொடுக்கும் வல்லமையைப் பெறுவார்கள். ஆதலால் தீய ஆவியின் பிளவுபடுத்தும் நிலையை தூய ஆவியானவரின் வல்லமையால் கண்டுணர்ந்து, வல்லமையோடு செயல் புரிவார்கள். ஆகவே நாம் ஆவியானவரின் செயற்பாட்டிற்கு ஒவ்வொரு கணமும் இடமளித்து இறை சாட்சியாளர்களாகுவோம்.

### செபம்

அன்பின் இறைவா! நாங்கள் காலையில் எழுந்த நேரம் முதல் நித்திரைக்கு போகும் வரை தூய ஆவியானவருக்குள் விழிப்புற்று வாழ்வதற்கு தேவையான வரத்தினைத் தந்தருளும். இயேசுவின் நாமத்தில் தாரும் ஆமென்.

***ஏனெனில் உன்னதராகிய ஆண்டவர் அஞ்சுதற்கு உரியவர்; உலகனைத்தையும் ஆளும் மாவேந்தர் அவரே.***

***பாடுங்கள்; கடவுளுக்குப் புகழ் பாடுங்கள்; பாடுங்கள் நம் அரசருக்குப் புகழ் பாடுங்கள்.***

***(தி. பா. 47:2,6)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை

பொ. கால 03வது ஞாயிறு,

2011 தை 23 ஞாயிறு

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | இரண்டாம் வெளிப்பாடு | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|---|
| எசாயா 9:1-4 | திரு. பாடல் 27:1-4, 13-14 | 1 கொரிந்தியர் 1:10-13, 17 | புனித மத்தேயு 4:12-23 |

இருளிலிருந்து ஒளி நிறைந்த வாழ்வுக்கு பாவ வாழ்விலிருந்து புண்ணிய வாழ்வுக்கு, நிழல் உலகிலிருந்து நிலை வாழ்வுக்கு இன்றைய வெளிப்பாடுகள் நம்மை அழைக்கின்றன. அத்தோடு இருள் வாழ்விலுள்ளோரை ஒளி மிகுந்த வாழ்வுக்கு எடுத்து வருவதற்கான அழைப்பும் இன்று நம் அனைவர் முன்னிலையிலும் வைக்கப்படுகின்றது. மனம் மாறுங்கள் என்ற கோரிக்கை இறையரசின் ஆழமான அனுபவத்திற்காகும். உலகில் வாழ்ந்தாலும் உலகைச் சாராதவர்களாக வாழ்வதற்கான மனமாற்றமாகும். *என் பின்னே வா* என்ற அழைப்பு அன்றும், இன்றும் என்றும் விடுக்கப்படுகின்ற அழைப்பாகும். அதற்காக அர்ப்பணமாகுவோம்....

### முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

***...காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது. ஆண்டவரே, அந்த இனத்தாரைப் பலுகிப் பெருகச் செய்தீர். அவர்கள் மகிழ்ச்சியை மிகுதிப் படுத்தினீர். அறுவடை நாளில் மகிழ்ச்சியுறுவதுபோல் உம் திருமுன் அவர்கள் அகமகிழ்கிறார்கள்...***

### ஒளியில் விழிப்புறுதல்

ஆதிமுதல் வெளிப்பாடாகி வந்த இறைதந்தையின் அன்பினைக் காணாது அனுபவியாது மனம் போன போக்கிலே வாழும் மக்களுக்கு நேரிய வழியைக் காண்பிப்பதற்கும் பாவ இருளினால் மூடப்பட்டிருந்த மக்களது வாழ்வுக்கு பேரொளியாவதற்காக வேண்டி தந்தையானவர் தம்மை அழைத்துள்ளார், அதுவே தமது பணியாகும் என்பதை இறைமகன் இயேசு இனங்கண்டு கொண்டிருந்திருப்பார். உலகின் ஒளி நானாவேன் என்று கூறுவதற்கு எசாயாவின் இந்த வெளிப்பாடு அவருக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். வாழ்க்கையில் பல துன்ப துரிதங்கள் மத்தியில் உதயமாக்கித் தரப்பட்டுள்ள இந்த மீட்பினை விடுதலையை அனுபவிப்பதற்கான உண்மையான தாகம் இருந்தது. அந்த தாகமானது தீர்க்கப்படுவது தமது அர்ப்பணமாகுதலின் பின்பேயாகும் என்பதனை அவர் தெளிவுபடுத்திக் கொண்டிருந்திருப்பார். அப்பா தந்தையானவரை எப்போதுமே மகிமைக்குட்படுத்தியவாறு அனைத்து மக்கள் மீதும் இறையன்பினை வெளிப்படுத்துவதே அவரது அபிலாஷையாகியதோடு அதற்காக வேண்டி முழு வாழ்க்கையையுமே அர்ப்பணமாக்கினார்.

### நற்செய்தியிலிருந்து

***...அது முதல் இயேசு மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது எனப் பறைசாற்றத் தொடங்கினார்... இயேசு சகோதரர் இருவரைக் கண்டார். இயேசு அவர்களைப் பார்த்து என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன் என்றார்... உடனே அவர்கள் தங்கள் படகையும், தந்தையையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். (நற்செய்தியைத் தியானமாக வாசிக்கவும்)***

### ஒளியில் விழிப்புறுதல்

இயேசு ஆண்டவர் மக்களது பேரொளியாவார் என்பதனை மனித ஞானத்தை மேம்பட்டதோர் ஒளியி-னால் கண்டதாலே என்னவோ, அழைப்பு விடுக்கப்பட்டதும் அதற்குச் சீடர்கள் பதிலளித்தனர். உடனே அவர்கள் தங்கள் படகையும் தந்தையையும் விட்டு விட்டு அவரைப் பின்பற்றினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் மாறுங்கள் என அழைப்பு விடுக்கின்ற இயேசு ஆண்டவரது உள்ளரங்கத்தின்பேரில் கண்களை ஏறெடுப்போம். கொள்கை வாதங்கள், நான் சரி எனப் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பவை, ஆண்டவராக்கிக் கொண்டிருப்பவை, பெறுமதி மிக்க வையெனக் கருதுபவை போன்றவற்றை முழுமையாக கைவிட்டு விட்டு, மீளத் திரும்புதற்கான அழைப்பு அல்லவா விடுக்கப்படுகின்றது? அது சவாலாகும். மனித ஞானத்திற்கமைய அது மடைமைத்தனமானதாகும். ஆயினும் இவ் வார்த்தை *என் பின்னே வாருங்கள்* என்ற அழைப்பு கல்வியறிவற்றவர்கள் எனக் கருதப்பட்ட எதுவிதமான தகுதியும் இல்லாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர் செவியில் பட்டதும் எதுவிதமான கேள்வியுமின்றி அழைப்பு விடுத்தவரைப் பின்பற்றத் தொடங்கினார்கள். சீடர்கள் ஏற்றுக் கொண்ட ஆண்டவரது சவாலானது அவ்வளவு எளிதானதாகாது. இறையரசுக்காக வேண்டி மக்களை அழைப்பதற்காக வேண்டி ஆண்டவர் அவர்களை அனுப்பப்படுபவர்கள் ஆக்கினார்கள். மனித ஞானத்தினால் விளங்கிக் கொள்ள முடியாததொன்றாகும். ஏனெனில் விசுவாசக் கண்கள் திறக்கப்படாதவர்களால் இதனைக் காண்பதற்கு முடியாது. ஆயினும் இறை புத்திரத் தன்மையின் சவாலை ஏற்றுக் கொண்டவர்களுக்கு ஆண்டவர் வல்லமையை அதிகமதிகமாகப் பொழிகின்றார்.

## இரண்டாவது வெளிப்பாடு

***சகோதர, சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் நான் உங்களைக் கேட்டுக் கொள்வது இதுவே. நீங்கள் ஒத்த கருத்துடையவர்களாய் இருங்கள். உங்களிடையே பிளவுகள் வேண்டாம். ஒரே மனமும் ஒரே நோக்கும் கொண்டிருங்கள்... திருமுழுக்குக் கொடுப்பதற்கு அல்ல நற்செய்தியை அறிவிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினார். மனித ஞானத்தின் அடிப்படையிலான சொற்களில் இந்நற்செய்தியை அறிவித்தலாகாது. அவ்வாறு அறிவித்தால் கிறிஸ்துவின் சிலுவை பொருளற்றுப் போய்விடும்.***

## ஒளியில் விழிப்புறுதல்

இயேசு கிறிஸ்து நாதருடைய மரணத்தினதும், உயிர்ப்பினதும் வல்லமையால் ஈர்க்கப்பட்ட பவுலடிகளார் அவர் வழியாய் கிடைக்கப் பெற்ற அழைப்பிற்கேற்ப செயற்பட வேண்டிய விதத்தைப்பற்றி சங்கத்தை நினைவுறுத்துகின்றார். ஒருமனப்படுதல் ஒற்றுமைப்படுதல் என்பனவற்றின் முக்கியத்தும், பெறுமதி என்பனவற்றையும் அதன் வழி ஏற்படுகின்ற சங்க வாழ்வின் ஊடாக உயிர்த்த ஆண்டவரை எம்மத்திக்கு அழைக்கலாம் என்பதையும் எமக்கு நினைவுறுத்து-கின்றார். எமது சங்க வாழ்வை ஆழப்படுத்திக்கொள்வதற்கான தாகத்தையும், அந்த வல்லமையின் சாட்சியாளராவதற்கான வல்லமையையும் ஆவியானவரிடம் வேண்டுவோம்.

## செபம்

அப்பா தந்தையே, உமது அழைப்பிற்குச் செவிமடுத்தவாறு அதற்கு அர்ப்பணமாவதற்கான வல்லமையையும், திடத்தையும் தாகத்தையும் ஆவியானவரின் வழியாக எம் அனைவருக்கும் தந்தருளும். அப்போது என்னால் ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு, யாருக்கு நான் அஞ்ச வேண்டும்? ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம். யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும்? என்று விசுவாசத்தோடு மற்றவர்களுக்கு சாட்சி பகர்வதற்கு முடியுமாகும், இயேசுவின் நாமத்தில் ஆமென்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 | தை 24 திங்கள் | புனித பிரான்சிஸ் சவேரியார் |
|---|---|---|
| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
| எபிரேயர் 9:15,24-28 | திரு.பா 98:1-6 | புனித மாற்கு 3:22-30 |

## நற்செய்தியிலிருந்து

*மேலும் ஜெருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர் இவனைப் பெயல்செபூல் பிடித்திருக்கிறது என்றும் பேய்களின் தலைவனைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான் என்றும் சொல்லிக் கொண்டிருந்தனர் ஆகவே அவர் அவர்களைத் தம்மிடம் வரவழைத்து அவர்களுக்கு உவமைகள் வாயிலாகக் கூறியது, சாத்தான் சாத்தானை எப்படி ஓட்ட முடியும்? உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். தூய ஆவியைப் பழித்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்புப் பெறார். அவர் என்றென்றும் தீராத பாவத்திற்கு ஆளாவார். ஆனால் மக்களுடைய மற்றப் பாவங்கள் அவர்கள் கூறும் பழிப்புரைகள் அனைத்தும் அவர்களுக்கு மன்னிக்கப்படும். இவனைத் தீய ஆவி பிடித்திருக்கிறது என்று தம்மைப் பற்றி அவர்கள் சொல்லி வந்ததால் இயேசு இவ்வாறு கூறினார்.*

## ஒளியின் விரிப்புறுதல்

இந்நற்செய்தினை தியானித்து இயேசு கிறிஸ்து ஆண்டவருடைய உள்ளத்தினைக் காண்பதற்கு எம் துணையாளராம் தூய ஆவியானவரே, பெலவீனனான எனக்கு உதவி செய்தருளும்.

யெருசலேமில் இருந்து வந்த மறை நூல் அறிஞர் இவனைப் பேயெல் செபூல் பிடித்திருக்கின்றது என்று கூறிய வார்த்தைகளைக் கேட்ட எம் ஆண்டவருடைய இதயம் வேதனையால் நிரம்பி வழிந்தது. அந்தத் தவறான கருத்தில் இருந்து மக்களுக்குத் தெளிவைக் கொடுப்பதற்கு ஆண்டவர் உவமை வழியாகப் பேசத் தொடங் கினார். சாத்தான் சாத்தானை எப்படி ஓட்ட முடியும் சாத்தான் சாத்தானை விரட்டாது என்று தெளிவுபடுத்தி விளக்குகின்றார். தனக்குத் தானே பிளவுபடும். எந்த அரசும், எந்த வீடும் நிலைத்து நிற்காது என்றும் அழிந்துபோய் விடும் என்றும் எடுத்து இயம்புகிறார். தூய ஆவியைப் பழித்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்புப் பெறார் என்று இயேசு ஆண்டவர் கடினமாகக் கூறுகின்றார். தூய ஆவியார் என்னும் வல்லமை மிக்கவர் வழிநடத்தாவிட்டால் இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழாமல், உலகத்துக்குரிய மக்களாக வாழ்ந்து தீராத பாவத்தினை சம்பாதித்துக் கொள்வீர்கள் என்றார்.

## எம் பேரில்

உன்னதமான நான்கு அன்பினையும் உணவாக்கிக் கொண்டு வாழும் நானும் நீங்களும் பரிசுத்த ஆவியானவர் பேரில் விழிப்புற்று வாழ்கின்றோமா? மறைநூல் அறிஞரைப் போல் யாரைப் பற்றி பேசுகின்றோம். எதைப்பற்றி பேசுகின்றோம் என்று புரியாமல் பேசுகின்றோமா? வல்லவராகிய தூய ஆவியானவர் எங்களுக்குள் இருந்து செயல்படுவதற்கு வரம் வேண்டி நிற்போம்.

## செபம்

அன்பின் இறைவா! பரிசுத்த ஆவியின் துணையோடு வாழவும், அவருடைய வல்லமையைப் பெற்று எமது குடும்பத்தையும் எனது புகழ்ச்சிக் கிராமத்தையும் கட்டி எழுப்புவதற்கு வரம் தந்து வழி நடத்தியருளும்.

*உலகெங்கும் வாழ்வோரே! அனைவரும்*
*ஆண்டவரை ஆர்ப்பரித்துப் பாடுங்கள்!*
*மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்துப்*
*புகழ்ந்தேத்துங்கள்*
*(தி. பா 98: 4)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை

2011 தை 25 செவ்வாய்

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | புனித பவுல் மனமாற்றம் நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| தி. தூத 9 : 1 - 22 அல்லது 22 : 3 - 16 | திரு.பா 117 : 1 - 2 | புனித மாற்கு 16 : 15 - 18 |

## நற்செய்தியிலிருந்து

*இயேசு அவர்களை நோக்கி உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர். நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர். அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர். புதிய மொழிகளைப் பேசுவர். பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர் மீது கைகளை வைக்க , அவர்கள் குணமடைவர் என்று கூறினர்.*

## ஒளியில் விழிப்புறுதல்

உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவுமில்லை. இதுவே மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த இயேசு ஆண்டவரின் தரிசனமும் உணவுமாக இருந்தது. இறை தந்தையின் திருவுள்ளம் நிறை வேற்றி விட்டார். மண்ணுலகிலிருந்து விண்ணகம் செல்ல ஆயத்தமாகின்றார். தமது பணி தொடர வேண்டும் என்ற ஆவல் அவருடன் இருந்தது. ஆகவேதான் தம் சீடரை அழைத்து உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்று கூறுகின்றார். இயேசு மரணத்தை வென்று உயிர்த்து விட்டார். உறுதியான மன மாற்றத்துடன் இதில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு மீட்பு உண்டு என்பதே நற்செய்தியாகும். இந்த நற்செய்தியைப் பறைசாற்றச் செல்லும் சீடர்களுக்குத் தன் வல்லமைகளைப் பகிர்ந்தளித்து திருமுழுக்கின் மூலம் இறை அரசின் பங்காளிகளாகின்ற உரிமை-யையும் கொடுக்கின்றார். கிறிஸ்த-வர்களை பீடனைக்கு உட்படுத்திய சவுல் அன்னிய சீடரின் ஸ்பரிசிப்பில் ஒளியைப் பெற்று மனம் திரும்பித் திருமு-ழுக்கைப் பெற்று இறை வல்லமையைப் பெறுவதும் இயேசுவே கிறிஸ்து என்பதை மெய்ப்பிப்பதை திருத்தூதர் பணியில் காணக்கூடியதாக இருக்கின்றது. இயேசுவின் குரலொலி சவுலை பவுலாக மாற்றியது. விழிப்புறுவோம்.

## எம் பேரில்

இயேசு மரணத்தை வென்று உயிர்த்து, இன்றும் எம்மோடு இருக்கின்றார் என்னும் நற்செய்தியை சகல மக்கள் மத்திக்கும் எடுத்துச் செல்லுவதற்கு குருக்கள் கன்னியருக்கு மட்டுமல்ல, திருமுழுக்குப் பெற்ற பொது நிலையினரான ஒவ்வொருவரும் பெற்றுள்ள இறைமகன் இயேசுவின் அழைப்பாகும். நிலை வாழ்வை நான் மாத்திரமல்ல என் அயலவனும் பெற வேண்டும் என்பது இயேசுவின் தாகம். மனமாற்றத்திற்காக இயேசு எம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றார். இன்று நாமும் பாவத்தினால் மனநோயுற்று இருக்கின்றோம். இயேசு எம்மைத் தொட்டுக் குணப்படுதத ஆயத்தமாக உள்ளார். இடமளிப்போம். வெறுமையாகுவோம், செபவாழ்வுக்குள்-ளாகுவோம். கிறிஸ்துவின் ஒளியினால் புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்ப நாம் ஒற்றுமைப்பட்டு செயல்பட முன்வருவோம்.

## செபம்

அன்பின் இறைவா! புத்தி-ரத்தன்மையின் உரிமையாளரான நான் அப்பா தந்தாய் என உம்மை அன்புடன் அழைக்க எனக்குத் தந்த வல்ல-மைக்காக நன்றி. தூய பவுலைப் போல இயேசு ஒரே ஆண்டவர் என்னும் சத்தி-யத்தை மக்கள் மத்தியில் பரப்ப தூய ஆவியின் கொடைகளினால் என்னை அபிசேகம் பண்ணி அனுப்பியருளும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 தை 26 புதன் | | புனித தீமோத்தேயு புனித தீத்து நினைவு |
|---|---|---|
| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
| 2 தீமோத்தேயு 1:1-8 அல்லது தீத்து 1:1-5 | திரு.பா 96:1-3, 7-8, 10 | புனித லூக்கா 10:1-9 |

## நற்செய்தியிலிருந்து

*இதற்குப் பின்பு ஆண்டவர் வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து அவர்களைத் தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார்... ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாற்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்.... பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம். நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும் இவ் வீட்டுக்கு அமைதி உண்டாகுக என முதலில் கூறுங்கள்....(நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியின் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! இறை வார்த்தையைத் தியானித்து அதைப் பகிர்ந்துக் கொள்ள எனக்கு உமது ஞானத்தைத் தாரும்.

*அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு* என இயேசு கூறுகின்றார். அவர் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்த காலத்தில் தம் ஒருவரால் மாத்திரம் அனைத்து மக்களுக்கும் இறையரசைப் பற்றி அறிவிக்க முடியாது என்பதை உணர்கிறார். அதனால், அவர் இருக்கும் போதே இருவர் இருவராக இறையரசைப் பரப்ப அனுப்புகிறார். அனுப்புவது மாத்திரமல்ல, அவர்கள் ஒழுக்கத்தை எவ்வாறு கடைபிடிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

இன்று அநேகர் இறை வார்த்தையை போதிப்பதாகக் கூறிக்கொண்டு பணம் - சொத்து சம்பாதிக்கும் வியாபாரிகளாக செயல்படுகிறார்கள். பணம் சம்பாதிப்பதற்கு இலகுவான வழியாக சபைகளை உருவாக்கி நோய்களை குணப்படுத்தி, பேய்களை ஓட்டி பணம் சம்பாதிக்கிறார்கள். இயேசு இலவசமாக செய்ய சொன்னவற்றை சொத்துக்காக செய்கிறார்கள். இவ்வாறானவர்கள் இயேசு விதித்துள்ள ஒழுங்கைக் கடைபிடிக்க வேண்டும். இயேசு எம்மையும் தமது பணியாளராக நியமித்துள்ளார். அப்படியாயின் நாமும் இயேசுவைப் போல் செபத்தில் தரித்திருந்து, எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இயேசுவைப் போல் உண்மையுள்ள பணியாளனாக செயல்பட, ஒழுக்கத்தை பேணும் பணியாளனாக முன்செல்வோம்.

## எமது பேறில்

*அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு* என கூறிய இயேசுவே, எமது பகுதிகளில், சங்கத்தில், திருச்சபையில் பணி புரியும் போது இறைவனின் விருப்பத்தை அறிந்து அதன்படி செயல்படுகிறோமா? அல்லது இச்சைகளுக்கு அகப்பட்டு எனது விருப்பத்திற்காக வாசிக்காக, எனது சுகத்திற்காக எனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள நான் இறைவனின் பணியாளன் என்ற பெயரைப் பாவித்து மக்களையும் ஏமாற்றி இறைவனையும் ஏமாற்ற முனைகிறேனா?

## செபம்

அப்பா தந்தையே! இறையரசின் மக்களாக எம்மையும் தேர்ந்தெடுத்தமைக்காக நன்றி. நான் பிழையான வழியில் செல்வதை உணர்கிறேன். இக்கணமே சரியான பாதையில் செல்லவும் இறையரசைப் பரப்ப உமது பணியாளனாக மாத்திரம் இருக்கவும் எனக்கு உமது ஆவியின் வழிகாட்டுதலைத் தந்தருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 *தை 27 வியாழன்* புனித மொசி ஆஞ்சலா கன்னிகை நினைவு

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 10 : 19 - 25 | திரு.பா 24 : 1 - 6 | புனித மாற்கு 4 : 21 - 25 |

## நற்செய்தியிலிருந்து

*இயேசு அவர்களிடம் விளக்கைக் கொண்டு வருவது எதற்காக? மரக்காலின் உள்ளேயோ கட்டிலின் கீழேயோ வைப்பதற்காகவா? விளக்குத் தண்டின் மீது வைப்பதற்காக அல்லவா! வெளிப்படாது மறைந்திருப்பது ஒன்றுமில்லை. வெளியாகாமல் ஒளித்திருப்பது ஒன்றுமில்லை. கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்..... நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். இன்னும் கூடுதலாகவும் கொடுக்கப்படும். ஏனெனில் உள்ளவருக்குக் கொடுக்கப்படும். இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். என்று அவர்களிடம் கூறினார்.*

## ஒளியில் விழிப்புறுதல்

யோர்தான் நதியில் திரு முழுக்குடன் என் அன்பார்ந்த மகன் நீரே உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் எனும் அப்பாவின் குரலொலிக்கு செவிமடுத்து தமது தூதுப் பணியை ஆரம்பித்த இறைமகன் இறை அரசைப் பற்றிய மறைபொருளை உலகெங்கும் பரப்பி அதைக் கட்டி எழுப்புவதே தமது தூதுப் பணி என்பதைக் காண்கிறார். விளக்கின் ஒளியை இன்றைய நற்செய்தியின் மூலம் உவமையாக எடுத்துக்காட்டி இறை அரசைப் பற்றிய மறை இரகசியத்தை எடுத்துக் காட்ட முன்வந்தார். இறை அரசின் மறை இரகசியத்தை ஒரு போதும் ஒளித்து வைத்திருக்கவோ வெளிப்படாது மறைத்து வைத்திருக்கவோ முடியாது என எடுத்துக் காட்டுகின்றார். ஒளி என்னும் இறை அரசைப் பற்றிய மறை இரகசியத்தை மக்களுக்குப் பரப்ப வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டும் அவர், இறை அரசைப் பரப்புவர்களுக்கும், பரப்பாதவர்களுக்கும் கிடைக்கப் போகும் நிலையை எடுத்துக் காட்டி நீங்கள் கேட்பதைக் குறித்து கவனமாய் இருங்கள் என அங்குள்ளவர்களை எச்சரிக்கிறார். இறை அரசைப் பற்றிய மறை இரகசியத்தை உலகெங்கும் பரப்ப வேண்டும் என்பதே அப்பாவின் திருச்சித்தம் என்பதைக் காண்பதுடன் அப்பாவின் திருவிருப்பத்தினை நிறைவேற்றிடத் தாகம் கொண்டார். இறை அரசிற்கான ஒளியாக வாழ்ந்து இறை அரசென்னும் ஒளியை உலகெங்கும் எடுத்துச் செல்ல எமக்கும் அழைப்பு விடுகின்றார்.

## எமது பேரில்

இறை அரசிற்காகவே வாழ்வதற்கு தாயின் வயிற்றில் பிறக்கு முன்பே எம்மைத் தேர்ந்து எடுத்த அப்பா தந்தையின் அழைப்பிற்கு எவ்வளவு தூரம் விழிப்புடையவர்களாக இருக்கின்றோம்? இறை அரசிற்காக எம்மை அர்ப்பணித்து இறை அரசின் ஒளியாக வாழ முன் வருகின்றோமா? இறை அரசைப் பற்றிய ஒளியை மற்றவர்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற தாகம் எம்முள் இருக்கின்றதா? நாமும் மரக்காலின் கீழேயோ கட்டிலின் அடியிலோ வைக்கப்பட்ட விளக்காகவா வாழ முற்படுகின்றோம். இறை அரசின் ஒளியாக வாழ்ந்து அந்த ஒளியை நோக்கி அழைத்துவர எம்மை வழிநடத்த தூய ஆவியானவருக்கு இடமளிப்போம்.

## செபம்

ஆண்டவரே, இறை அரசின் மகனாக மகளாக வாழத் தேர்ந்தெடுத்தீரே, நன்றி அப்பா. உலகிற்கு ஒளியாக வாழ்ந்து இறை அரசின் பெறுமதியை மற்ற வர்களுக்கு எடுத்துக்காட்ட உமது பரிசுத்த ஆவியின் வல்லமையால் எம்மை வழிநடத்தும் இயேசுவின் நாமத்தில ஆமென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 தை 28 வெள்ளி | | மறை வல்லுனர் அக்குவினோ நகர் தூய தோமா நினைவு |
|---|---|---|
| முதலாம்வெளிப்பாடு<br>எபிரேயர் 10 : 32 - 39 | பதிலுரைப்பாடல்<br>திரு.பா 37 : 3 - 6, 23 - 24, 39 - 40 | நற்செய்திவெளிப்பாடு<br>புனித மாற்கு 4 : 26 - 34 |

## நற்செய்தியிலிருந்து

*கடவுளரசு நிலத்தில் விதையைப் போட்ட ஒருவனுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் இரவில் தூங்கினாலோ, பகலில் விழித்திருந்தாலோ எவ்வாறென்று அவனுக்குத் தெரியாமல் விதை முளைத்து வளர்கிறது. நிலம் தானாகவே பலன் அளிக்கிறது. முதலில் பயிர், பின் கதிர், அதன்பின் கதிர் நிறைய மணி. பயிர் விளைந்த பின் அவன் அரிவாளை எடுக்கிறான். ஏனெனில் அறுவடை வந்துவிட்டது என்றார். பின்னும் கடவுளரசு கடுகு மணியைப்போன்றது. இது நிலத்தில் விதைக்கப்படும் பொழுது உலகிலுள்ள விதைகளிலெல்லாம் மிகச் சிறியது விதைத்த பின்போ முளைத்தெழுந்து செடிகளிலெல்லாம் மிகப் பெரியதாகித் தன்..... என்றார்*

## ஒளியில் விழிப்புறுதல்

என் உள்ளத்தை ஆட்கொண்டிருக்கும் தூய ஆவியே! இன்றைய வார்த்தையின் வழி கிறிஸ்து இயேசுவின் உள்ளாந்தரத்தை சற்றேனும் அள்ளிச் சுவைத்திட என்னுள் இருந்து என்னை வழிநடத்தும்.

அவன் தூங்கினாலோ விழித்திருந்தாலோ அவன் விதைத்த விதைகள் அவனுக்குத் தெரியாமலேயே முளைத்து வளர்கின்றது என்றாலும் அந்த நிலத்தின் பெறுமதி தான் காரணியாகும். நிலம் தானாகவே பலனளிப்பதற்கு முடியாது. விதையையும் யாராவது விதைக்கத்தான் வேண்டும். முதலில் பயிர் பின் கதிர், அதன்பின் கதிர் நிறைய மண் தானாக வருமேயானால் அதற்குச் சக்தியை அளிப்பவர் அகிலத்தையும் அரவணைக்கும் ஆண்டவராகவே தான் இருக்க வேண்டும். நம்முடைய உள்ளத்தில் விதைக்கப்பட்ட இறையரசு என்னும் விதை நம்மை அறியாமலேயே எமதுள்ளத்தில் பயிராக, கதிராக, மணியாக வளருமேயானால் எமதுள்ளத்திலும் உள்ள தூய ஆவியெனும் சக்திதான் காரணமாகும். அறுவடைகாலத்தில் நம்முடைய கதிர் மணிகளையும் கொய்வதற்கு கடவுள் அரிவாளை எடுப்பார்.

இன்னும் இறையரசை கடுகு மணிக்கு ஒப்பாக்குகின்றார். கடுகு மணி விதைக்கும்போது மிகச்சிறிய விதையாக இருந்தாலும் ஈற்றில் பறவைகள் வந்து தங்கும் பெரிய மரமாக மாறுகின்றது மட்டுமன்றி அவைகள் இளைப்பாறும் இடமாகவும் இருக்கிறது. கடவுளின் வார்த்தைகளும் இக்கடுகு மணியைப் போல தென்படினும் அது தங்கி வாழ்வதற்கும்,இளைப்பாறுவதற்கும் நம்மை விமோசனம் செய்வதற்கும் உரிய உகந்த வார்த்தைகளாக உள்ளன.

## எம் பேரில்

இயேசுவை எனது ஒரே ஆண்டவராகக் கொண்டு அவரில் முழுமையாக தங்கி வாழ்கின்றேனா? கிறிஸ்து இயேசு எக்கணமும் அப்பா தந்தையில் தங்கி வாழ்ந்தது போல நானும் அவரில் தங்கி வாழ்கின்றேனா? இல்லாவிட்டால் அவர் எனக்கு விடுக்கும் அழைப்பை ஒதுக்கித் தள்ளி விட்டு என் போக்கில் வாழ்கின்றேனா? கடுகு மரத்தைப்போல மற்றவர்களுக்கு நிழல் கொடுக்கும் மரமாக நான் வாழ்வதற்கு எத்தனித்ததுண்டா? *உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறெதுவுமல்லை* என வார்த்தையினால் மட்டும் கூறும் கடவுளின் மகனா? சிந்திப்போமா! உறுதியளிப்போம்.

## செபம்

படைப்புக்கள் அனைத்திலும் நிலைத்திருக்கும் இறைவா! தாழ்ந்த மனதுடன் எனது அழைப்பிற்கு விழிப்புற்று பயனுள்ளவளாக பயனுள்ளவனாக வாழ வரம் தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை

2011 *தை 29 சனி*

| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
|---|---|---|
| எபிரேயர் 11:1-2, 8-19 | புனித லூக் 1:69-75 | புனித மாற்கு 4:35-41 |

### நற்செய்தியிலிருந்து

*அன்றொரு நாள் மாலை நேரம் இயேசு சீடர்களை நோக்கி அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள், என்றார். அவர்கள் மக்கள் கூட்டத்தை அனுப்பிவிட்டு, படகில் இருந்தவாறே அவரைக் கூட்டிச் சென்றார்கள். வேறு படகுகளும் அவருடன் சென்றன. அப்பொழுது ஒரு பெரும் புயல் அடித்தது. அலைகள் படகின் மேல் தொடர்ந்து மோத, அது தண்ணீரால் நிரம்பிக் கொண்டிருந்தது. அவரோ படகின் பிற்பகுதியில் தலையணை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்... காற்றும் கடலும் இவருக்கு கீழ்படிகின்றனவே இவர் யாரோ? என்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள் ( நற்செய்தியை தியானமாக வாசிப்பவும்)*

### ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! இளம் தென்றலாக வந்து என்னை ஸ்பரிசித்தருளும்.

இயேசு படகின் பின்பகுதியில் தூங்கிக் கொண்டிருந்தார். சீடர்கள் போதகரே! சாகப்போகிறோம் என்கிறார்கள். இந்நிலை ஏற்படக் காரணம் நம்பிக்கை இழந்த நிலை என்று காணக்கூடியதாயுள்ளது. அவரோடு ஒன்றித்திருந்தால் காற்றுக்கும் கடலுக்கும் பயந்திருக்க மாட்டார்கள். இயேசு அவர்களின் நிலைகண்டு மனவேதனையுடன் இன்னும் என்னில் நம்பிக்கையில்லையா ஏன் அஞ்சுகிறீர்கள்? என்று கேட்ட கணதில் இறை அப்பாவுடன் தரித்து நின்றிருப்பார். முதலாம் வெளிப்பாட்டில் நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கியிருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி, கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை, இந்த நம்பிக்கையால்தான் நம் மூதாதையர் நற்சான்று பெற்றனர். ஆபிரகாம் வயது முதிர்ந்து உயிரற்றவர்போல் இருந்தவர். அவரிடமிருந்து வானத்திலுள்ள திரளான விண்மீன்கள் போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறைந்த மணலைப போலவும் கணக்கற்ற மக்கள் பிறந்தனர். ஆபிரகாம் சோதிக்கப்பட்டபோது தன் ஒரே மகன் ஈசாக்கைப் பலியிட துணிந்ததே நம்பிக்கையில்தான். ஏனெனில் கடவுள் இறந்தோரை உயிரோடு எழுப்ப வல்லவர் என்பதை அவர் உணர்ந்திருந்தார். எனவே அவர் தம் மகனை மீண்டும் பெற்றுக் கொண்டார். பின்பு நடக்க இருந்ததற்கு இது ஒரு அறிகுறி.

### எம்மில் விழிப்புறுதல்

இயேசுவோடு எமக்கு இருக்கும் உறவின் ஆழம் என்ன? நாம் எதிர்பாராத நிகழ்வின்போது தடுமாறும் வேளையில் அவரில் நம்பிக்கை வைத்தேனா? அவரைப் பற்றிக்கொண்டபோது அவர் கரை சேர்த்த விதத்தை உணர்ந்தேனா? அதை வாழ்நாள்பூராவும் நினைத்து நன்றி கூறுகிறேனா? உணர்வில் கொள்வோம் ஆண்டவர் என்றென்றும் நம்பிக்கைக்கு உரியர்.

### செபம்

ஆண்டவரே! உமது பேரன்பு எனக்குக் கிடைக்கச் செய்யும். ஏனெனில் உமது வாக்கில் எனக்கு நம்பிக்கை உண்டு இயேசுவின் நாமத்தில் ஆமென்.

**தூய்மையோடும் நேர்மையோடும்**
**வாழ்நாளெல்லாம் அச்சமின்றி அவர் திருமுன்**
**பணி செய்யுமாறு வழிவகுத்தார்**

**(புனித லூக் 1 : 75)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை

| | | | |
|---|---|---|---|
| 2011 தை 30 ஞாயிறு | | | பொ. கா. 4வது ஞாயிறு |
| முதலாம்வெளிப்பாடு<br>செப்பனியா 2:3, 3:12-13<br>அல்லது இணைசட் 6:1-9 | பதிலுரைப்பாடல்<br>திரு.பா 146:6-10<br>அல்லது 128 : 1 - 5 | இரண்டாம் வெளிப்பாடு<br>1கொரிந்தியர் 1:26-31<br>அல்லது கொலோ 3:12-21 | நற்செய்திவெளிப்பாடு<br>புனித மத்தேயு 5:1-12<br>அல்லது புனித மாற்கு 10:13-15 |

## அறிமுகம்

யோர்தான் நதிக்கரையில் ஆவியானவரது திருமுழுக்கோடு இயேசு பெற்றுக்கொண்ட புத்திரத்தன்மையையே நாமும் எமது திருமுழுக்கின் போது பெற்றுக் கொண்டோம். அந்தப் புத்திரத் தன்மையோடு கிடைக்கப் பெற்ற அழைப்பையும் சவாலையும் பெற்றுக் கொண்ட நாம் அனைத்திலும் இறைவனை மகிமைக்குட்படுத்துவோம். ஆண்டவரது ஆளுமை, அரசாட்சி எம்மிடையே இருக்கின்ற தென்பதை உறுதிப்படுத்துகின்ற பவுலடிகளார் ஆண்டவரது இதயத்தில் வரையப்பட்டிருந்த இறை தந்தையின் விருப்பத்தை இனங்கண்டு கொண்டு அதற்காக வேண்டி சங்கத்தின் வாயில்களைத் திறந்து விடுகின்றார். ஆண்டவரது நீதியை சாதாரணத்துவத்தை, பாதுகாவலோடு அவரது விருப்பத்தை நிறைவேற்றுகின்ற யுகம் உதயமாகியுள்ளது.

## முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

*நாட்டிலிருக்கும் எளியோரே, ஆண்டவரின் கட்டளையைக் கடைப்பிடிப்போரே! அனைவரும் ஆண்டவரைத் தேடுங்கள். நேர்மையை நாடுங்கள். மனத்தாழ்மையைத் தேடுங்கள். ஆண்டவரது சினத்தின் நாளில் ஒருவேளை உங்களுக்குப் புகலிடம் கிடைக்கும். ஏழை, எளியோரை உன் நடுவில் நான் விட்டு வைப்பேன்... அச்சுறுத்துவார் யாருமின்றி, அவர்கள் மந்தைபோல் மேய்ந்து இளைப்பாறுவார்கள்....*

## இறை மகன் பேரில்

தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுகின்ற மக்களது பெறுமதி பற்றிய இறைவனுடைய வார்த்தை எம் ஆண்டவராம் இயேசுவுக்கு பேரொளியாக அமைந்திருக்கும். இறை மகனொருவருக்குரிய இந்தப் பெறுமதிகளை அணிந்து கொண்டு அவரது பிரியமான, அன்பார்ந்த தன்மையை அனுபவிப்பதற்குத் தமக்கும், புத்திரத்தன்மைக்குள் வாழ அழைக்கப்பட்டோருக்கு, உள்ள அழைப்-பினை அவர் இனங் கண்டிருப்பார்

தந்தையின் நீதி, நேர்மை என்பனவற்றை உலக ஞானத்தோடு ஒருபோதுமே ஒப்பிட்டுவிட முடியாது. அதனைக் காண்பதற்கான தாகங் கொண்ட இதயத்தைப் போலவே, கீழ்ப்படிவும் மிகவும் முக்கியமானதாகும். அவரது முன்னிலையில் சிறு பிள்ளையாவதற்காக வேண்டியுள்ள அழைப்பைப் பற்றியும் அவரில் தங்கிவாழ்வதன் பெறுமதியும் இன்று நினைவு படுத்தப் படுகின்றது.

## பரிசுத்த நற்செய்தியிலிருந்து

*....நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் இரக்கம் பெறுவர்... நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. என்பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து துன்புறுத்தி உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவை யெல்லாம் சொல்லும் போது நீங்கள் பேறுபெற்றவர்களே. மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள். ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைமாறு மிகுதியாகும்....*

## இறைமகன் பேரில்

தூய ஆவியானாவரே! இறை மகனது உள்ளரங்கத்தை எமக்குக் காண்பித்தருளும். கிறிஸ்து ஆண்டவர் தமது நோக்கினை மலைப்பொழிவு வழியாக வெளிப்படுத்துகிறார். அவர் நீதியைப் பற்றிக் கதைக்கின்றார். நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட அரசியல்வாதிகள், பலவிதமான தலைவர்கள், பலவிதமான நிறுவனங்கள் கதைக்கின்ற நீதியா இது? ஆவியானவர் கிறிஸ்து ஆண்டவரது நோக்கின் ஒளியை எமக்குத் தருகின்றார். அவரது நீதியின் பேரில் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர். அதனை உதயமாக்குவதற்காக வேண்டி பீடனைப்படுவோர், அர்ப்பணமாவோர் பேறுபெற்றோர். இது மனித ஞானத்திற்கென்றால் முரண்பாடானதாகும்.

தந்தையின் ஆளுமையால், அவரது விருப்பம் நிறைவேறுகின்ற இடம் இறையன்பின் மறை இரகசியத்தைத் தேடுவதற்கான வேட்கை கொண்டோர் இருக்கும் இடம், அதற்காக வேண்டி அர்ப்பணமாவோர் இருக்கின்ற இடம் போன்றவற்றில் இறைவனுடைய நீதி நிலைநாட்டப்படும் விதத்தைக் காண்பதற்கு முடியுமாகும்.

இறைவனுடைய ஞானமானது மனித சிந்தனைக்கு மரண அடிகொடுக்கும். தமது சொந்த அபிப்பிராயங்களை மாத்திரம் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வோரால் சுமக்க முடியாத சுமையாகும். ஆனாலும் அதன் பேரில் தாகங்கொள்வோர் பெலவீனரான போதிலும் ஆண்டவரது பேறுபெற்ற தன்மையை அனுபவிப்பதற்கு முடியுமாகுமென இன்று வெளிப்பாடாக்கப்படுகின்றது.

## இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

*சகோதர, சகோதரிகளே, நீங்கள் அழைக்கப்பட்ட நிலையை எண்ணிப் பாருங்கள்... கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார்... உலகம் ஒரு பொருட்டாகக் கருதுபவற்றை அழித்துவிட அது தாழ்ந்ததாகக் கருதுபவற்றையும் இகழ்ந்து தள்ளுபவற்றையும் கடவுள் தேர்ந்தெடுத்தார். எவரும் கடவுள் முன் பெருமைபாராட்டாதபடி அவர் இப்படிச் செய்தார்.*

## இறைமகன் பேரில்

தம்மைப் பற்றிப் பெருமை பாராட்டிக் கொள்வதற்கு தம்முடையதென்று ஒன்றுமில்லை யெனவும், அனைத்தும் இறைவனது திருவுளத்திற்கு அமையவே கிடைக்கப் பெற்றுள்ளதென்று பவுலடிகளார் சங்கத்திற்கு அறிவுறுத்துகின்றார். மனித ஞானத்திற்கு மடமை எனக் கருதப்படுபவற்றைத் தேர்ந்து கொள்வதானது சவால் மிகுந்ததானதாகும். மேலும் கிறிஸ்து நாதருடைய துன்புறுத்தல், மரணம், உயிர்ப்பு வழியாக நாம் மீட்பினைப் பெற்றிராவிட்டால் நாம் இன்றும் அடிமைகளே!

இறைவனுடைய பரிசுத்தத்தின் முன்னிலையில் அவரை மேம்பட்டுச் செல்வதற்கு முடியாதெனவும், பெலவீனம், முடியாமை என்பன ஆண்டவரது அன்பினை அனுபவிப்பதற்கான ஊடகம் எனவும் நினைவுறுத்தப்படுகின்றோம். அனைத்திற்கும், அனைவருக்கும் பெறுமதியைத் தருகின்ற, அனைவருள்ளும் வீற்றிருக்கின்ற தந்தையின் மாட்சிமையை வெளிப்பாடாக்குகின்ற ஆண்டவரைக் காண்போம். அவரை நமஸ்கரிப்போம்.

## செபம்

பரிசுத்த ஆவியானவரே, அனைத்தும் தந்தையினதே என்பதன் பேரிலும் அனைத்திற்காக வேண்டியும் அவரைப் புகழ்வதற்கான அழைப்பையே நாம் பெற்றுள்ளோம் என்பதன் பேரிலும் எம்மை விழிப்புறச் செய்தருளும். தந்தையின் நீதியின் பேரில் தாகங்கொள்வதற்கான வல்லமையைத் தந்தருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 தை 31 திங்கள் | | புனித தொன் போஸ்கோ திருநாள் |
|---|---|---|
| முதலாம்வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்திவெளிப்பாடு |
| எபிரேயர் 11 : 32-40 | திரு.பா 31 : 19 - 23 | புனித மாற்கு 5 : 1 - 20 |

## பரிசுத்த நற்செய்தி

*கடலுக்கு அக்கரையிலிருந்து கெரசேனர் பகுதிக்கு வந்தார்கள். இயேசு படகைவிட்டு இறங்கிய உடனே தீய ஆவி பிடித்த ஒருவர் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிரே வந்தார். கல்லறைகளே அம் மனிதரின் உறைவிடம். அவரை எவராலும் சங்கிலியால் கூட கட்டிவைக்க முடியவில்லை. பலமுறை விலங்குகளாலும் சங்கிலிகளாலும் கட்டியிருந்தும் அவர் சங்கிலிகளை உடைத்து விலங்குகளைத் தகர்த்தெறிந்தார். எவராலும் அவரை அடக்க இயலவில்லை. இரவு பகலாய் கல்லறைகளிலும் மலைகளிலும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். தம்மையே கற்களால் காயப்படுத்தி வந்தார். தொலைவிலிருந்து இயேசுவைக் கண்டு ஓடிவந்து அவரைப் பணிந்து இயேசுவே உன்னத கடவுளின் மகனே உமக்கு இங்கு என்ன வேலை? கடவுள் மேல் ஆணை என்னை...... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

## ஒளியில் விழிப்புறுதல்

எனக்குள்ளே இருந்து வாசம் செய்யும் பரி. ஆவியானவரே! இயேசுவின் உள்ளத்தை புரிந்து எழுதுவதற்கு உமது ஞானத்தினாலும் வல்லமையினாலும் என்னை நிரப்பியருளும்

கல்லறைதான் அம்மனிதனின் உறைவிடம். சங்கிலியாலும் விலங்குகளாலும் கட்டி இருந்தாலும் இவற்றையெல்லாம் தகர்த்தெறிந்துவிடுவான். ஏனென்றால் முழுமையாக தீய சக்தியால் ஆட்கொள்ளப்பட்டிருந்தான். தம்மையே கற்களால் காயப்படுத்திக் கொள்கிறான். அந்நேரத்தில் அங்கு இறைமகன் வருவதைக் கண்டு அவரைப் பணிந்து உன்னத கடவுளின் மகனே உமக்கு இங்கு என்ன வேலை? கடவுள் மேல் ஆணை என்னை வதைக்க வேண்டாம். என்றுஇந்த உலகத்தை படைத்தவரைப் பார்த்தே கேட்கிறான். ஏனென்றால் சாத்தான் இம்மனிதன் மூலமாக இந்த இடத்தை ஆட்டிப்படைக்கலாம் என்று நினைத்திருப்பான். ஆனால் இறைமகனானவர் தீய ஆவியே இம்மனிதரைவிட்டுப் போ என்றார். அத்தோடு உன்பெயர் என்ன என்று கேட்க அவன் என்பெயர் இலகியோன் என்றான். (இலகியோன் என்பது உரோமப்படையில் பெரும் பிரிவு கொண்டது) அந்த பலசாலியான இலகியோனை விரட்டிவிட்டார் பேய் பிடித்திருந்த அவர் ஆடையணிந்து அறிவு தெளிந்து இருப்பதைக் கண்டு மக்கள் வியர்த்தனர். இயேசு படகில் ஏறும்போது அம்மனிதர் உம்மோடு வருகிறேன் என்றார். ஆண்டவர் இயேசு கிறிஸஜ்துவோ ஆண்டவர் உம்மீது இரக்கங்கொண்டார். என்று உம் உறவினருக்கு அறிவியும் என்றார். அவரும் ஆண்டவருக்கு சாட்சி கூறுவதற்காக பொலி நாட்டிற்குச் சென்றார்

## எம்பேரில்

இன்று எம்மை ஆட்டிப் படைக்கும் தீய ஆவியின் செயற்பாட்டிற்கு விழிப்புறுவோம் சாத்தான் அநேக குடும்பங்களை கட்டிவைத்திருக்கிறான். அநேக குடும்பங்களில் பில்லி சூனியக் கட்டுக்கள் மந்திரவாதிகளிடம் செல்லுதல், குறிசொல்லும் இடத்தில் சென்று குடும்பங்கள் சீர்குலைவதற்கு பேய் பூஜைகள் செய்வது இவையெல்லாம் எங்களை ஆட்டிப்படைக்கும் தீய சக்திகள். இப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்கள் இலகியே மீட்கப்பட்டது போல் மீட்கப்படுவதற்கு இறைவனை நாட வேண்டும். நம்மை எல்லா இக்கட்டுகளிலும் இருந்தும் மீட்கிறவர் அவர் ஒருவரே. இந்த உலகில் உள்மனத்திற்கு ஆறுதலை தந்து நமமிடமுள்ள தீய சக்தியை மீட்கின்றவர் அவர் ஒருவரே. அனுதினமும் அவரையே நாடுவோமத். அவரின் அன்பினால் நம்மை வழிநடத்துவார் விசுவாசிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

பெயர் : ..............................................................................................................

சஞ்சிகையை அனுப்ப வேண்டிய விலாசம் : ..............................................................

..............................................................................................................

.................ஆம் ஆண்டு...................... மாதம் தொடக்கம் ஆறு/பன்னிரெண்டு மாதங்களுக்காக ரூபா..............................ஐ........... இலக்கமுடைய காசுக்கட்டளையை /காசோலையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

திகதி :.................................

.........................................

கையொப்பம்

---

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகை

❖ தபால் கட்டணத்துடன் : ஆறு மாதங்கள் - ரூ. 110.00

பன்னிரெண்டு மாதங்கள் - ரூ. 220.00

❖ காசுக்கட்டளைகள்/காசோலைகள் : "கிது தன புபுதுவ" என்ற பெயருக்கு மாத்திரம் அனுப்பவும்.

❖ பணம் செலுத்தும் அலுவலகம் : வல்பொல (மே. மா.)

❖ புபுதுவ நடுநிலையம் : ஸ்ரீ பிரசங்சாராமய, வல்பொல, ராகம.

தொலைபேசி : 011-2230300 ப/க்ஸ் : 011-2231490

மின்தபால் (E-mail) : pubuduwa@wow.lk

Website : www.kithudanapubuduwa.net

அச்சகம் : புபுது அச்சகம்,

452, தேசிய பெசிலிக்கா மாவத்தை, தேவத்தை, ராகம.

தொலைபேசி : 011-2958439

❖ பகிர்ந்தளித்தல் : "புபுதுவ" வெளியீடு - பரப்புதல் சேவை

ஸ்ரீ பிரசங்சாராமய, வல்பொல, ராகம.

தொலைபேசி : 011-2230300

❖ சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள் :

- ஸ்ரீ ரம்யா ராமய, பாலக்குடா, தலவில கோயில்.
- ஸ்ரீ கிறிஸ்து தர்மாராமய, தெதுரு ஓயா, மானுவன்கம, சிலாபம்.
- புபுது நிவச, தம்பறாவில, வைக்கால்.
- புபுது நிவச, தங்கொட்டுவ.
- புபுது நிவச, 386, பிரதான வீதி, நீர்கொழும்பு.
- கிறிஸ்து கேந்திரய, ஜா-எல.
- 7வது மாடி, 6வது சின்னப்பர் நடுநிலையம், கொழும்பு-11.

விலை ரூ. 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்பட கதை தை மாதம்

இயேசு கிறிஸ்து நாதர்
யோர்தான் ஆற்றில் தூய ஆவியின்
ஞானஸ்நானம் பெற்ற கணம்,

மனுமகனுக்கு விண்ணிலிருந்து
ஒலித்த குரல் கேட்ட கணம்,

**என் அன்பார்ந்த மைந்தர் இவரே.**
**இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்.**

(புனித மத்தேயு 3:17)

பலவிதமான பெலவீனங்களுக்கும்
மனித கட்டுப்பாடுகளுக்கும்
உட்பட்டிருக்கும், அனைத்து
நிலைகளிலும் அடிமையாயிருக்கும்
ஒருவருக்கு இந்த குரல் கேட்ட கணத்திலிருந்து,

**நான் மனித மகன் ஆனாலும்**
**இப்போது நான் இறை மகன்.**

பரிசுத்தமானவன் - பரிசுத்தமானவள்.
புத்திரத்தன்மையை அனுபவிப்பதுடன்
நான் புதிய பயணத்திற்கு
அடி எடுத்து வைக்கிறேன்.

அப்போது,

**உமது விருப்பத்தைத் தவிர**
**எனக்கு வேறு எதுவும் இல்லை**
என்பது எமது தலைப்பாகிறது.

2011 தை மாத தூய ஆவியில் பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1391 - 5975